பக்கங்கள் 26

# காலை முரசு

முழக்கம்: 02 வள்ளுவ ஆண்டு 2055 ஆடி 28 புதன்கிழமை 13.08.2025 அதிர்வு 12

## கொலைக் கலாசாரத்துக்கு உடனே முடிவு கட்டுங்கள்!

### அரசிடம் சஜித் வலியுறுத்து



இலங்கையில் தற்போது பரவி வரும் கொலைக் கலாசாரத் துக்கு உடனடியாக முடிவு கட்டுங்கள் என்று எதிர்க் 03▶



# முரண்பாடு, பிளவு அரசுக்குள் இல்லை

## சஜித்தும் நாமலும் பகல் கனவு காணாதீர்கள் என்று அமைச்சர் நளிந்த நேற்று சாட்டையடி

”ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தலைமையிலான தேசிய மக்கள் சக்தி அரசுக்குள் எந்த முரண்பாடுகளோ, பிளவு களோ இல்லை. நாட்டைக் கட்டியெழுப்பு வதற்காக அமைச்சரவை ஒற்றுமையுடன் ஒருமித்துச் செயற்பட்டு வருகின்றது. எனவே, சஜித் பிரேமதாஸவும் நாமல் ராஜபக்ஷவும் பகல் கனவு காணாது 03▶

# யாழ். மாவட்டத்தின் தற்போதைய நிலைமை: அரச அதிபருடன் சி.வி.கே. கலந்துரையாடல்



(ந.லோகதயாளன்)

வடக்கு மாகாண அவைத் தலை வரும் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவருமான சி.வி.கே. சிவஞானம், யாழ்ப்பாணம் மாவட்ட அரச அதிபர் மருதலிங்கம் பிரதீ பனைச் சந்தித்துக் கலந்துரையா டினார்.

இந்தச் சந்திப்பு நேற்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2 மணிக்கு யாழ். மாவட்ட அரச அதிபர் அலுவலகத்தில் நடைபெற்றது.

இதன்போது யாழ். மாவட்டத்தின் தற்போதைய நிலைமைகள் தொடர்பாக அரச அதிபருடன் சிவஞானம் கலந்துரை 03▶




இலங்கையின் நீதித்துறை யின் மோசமான சீத்துவத்துக்கு முக்கிய காரணம் நீதி வழங்கு வதில் அது காட்டும் தாமதம் தான்.

அதை ஒட்டி இரண்டு விட யங்களை இன்று சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் வண. அத்துரலிய ரத்தின தேரர் தாக்கல் செய்தி ருந்த முன்பிணை அனுமதி கோரும் விண்ணப்பத்தை நுகே கொட மேலதிக நீதிவான் சஞ்சய் லக்மல் விஜேசிங்க நிராகரித்திருக்கிறார்.

இதனை அடுத்து அத்துரலிய ரத்தின தேரரைக் கைது செய்வ தற்காகப் பொலிஸார் தேடி வருகின்றனர் என்று கூறப்ப டுகிறது. 02▶





# யாழ். மாவட்ட அரச அதிபருடன் சிறீதரன் எம்.பி. நேற்று சந்திப்பு

## மாவட்ட அபிவிருத்திகள் தொடர்பில் கேட்டறிவு

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன், யாழ்ப்பாணம் மாவட்ட அரச அதிபர் மருதலிங்கம் பிரதீபனைச் சந்தித்துக் கலந்துரையாடினார்.

இந்தச் சந்திப்பு நேற்று செவ்வாய்க் கிழமை காலை 9 மணியளவில் யாழ். மாவட்ட அரச அதிபர் அலுவலகத்தில் நடைபெற்றது.

இதன்போது பன்முகப்படுத்தப்பட்ட வரவு - செலவுத் திட்டம், நெடுந்தீவின் வீதி புனரமைப்பு மற்றும் சுற்றுலா அபிவிருத்தி, மாவட்ட அபிவிருத்தி மற்றும் குறிகட்டுவான் இறங்குதுறை அபிவிருத்தி தொடர்பான விவரங்களை அரச அதிபரிடம் சிறீதரன் எம்.பி. கேட்டறிந்து கொண்டார்.

---

### இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அதுவல்ல விடயம். இப்போது எதற்காக முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரைக் கைது செய்யப் பொலிஸார் முயற்சிக்கின்றனர் என்பதுதான் இலங்கையின் நீதித்துறையின் சீத்துவத்தை வெளிப்படுத்துகிறது.

2020 ஆம் ஆண்டு பொதுத் தேர்தலில் 'அப்பே ஜனபல பக்ஷய' என்ற கட்சிக்கு தேசிய பட்டியல் மூலம் ஒரு நாடாளுமன்ற உறுப்பினர் பதவி கிடைத்தது. அந்தப் பதவிக்கு அத்துரலிய ரத்தின தேரர் நியமிக்கப்பட்டார் என அறிவிக்கப்பட்டது. அவர் பதவியேற்று, அந்த நாடாளுமன்ற பதவிக்காலமும் முடிந்து விட்டது.

ஆனால், அவர் பதவியேற்ற சமயத்தில் அந்தக் கட்சியின் செயலாளராக இருந்த வண வெடிகம விமல திஸ்ஸ தேரர் என்பவர் தம்மை அத்துரலிய ரத்தின தேரர் கடத்திச் சென்று, பலவந்தமாகக் கையொப்பம் பெற்று, அதன் மூலம் அத்துரலிய ரத்தின தேரர் தேசிய பட்டியல் எம்.பியானார் என்று முறைப்பாடு செய்தார்.

அந்த முறைப்பாட்டின் மீதுதான் இப்போது 5 ஆண்டுகள் கழிந்து, கைது நடவடிக்கை முயற்சி நடக்கிறதாம்...!

இலங்கையின் சட்டத் துறையின் வேகம் மலைக்க வைக்கின்றது.

அந்த வகையில் இன்னொரு தகவல்.

நான்கரை ஆண்டுகளுக்கு முன்னர் தமிழர் தாயகத்தில் பரபரப்பாக நடைபெற்ற பொத்துவில் முதல் பொலிகண்டி வரை (P2P) பேரணி மக்கள் மனதில் அகலாத விடயம்.

அந்தப் பேரணியில் பங்கு கொண்ட மல்லாவி வர்த்தக சங்க உறுப்பினர்களுக்கு எதிராக, அந்தப் பேரணியின் போது எடுக்கப்பட்ட ஒளிப்படங்களின் அடிப்படையில் இப்போது வழக்கு தாக்கல் செய்யப்பட்டு இருக்கின்றது.

அந்தப் பேரணிக்கு எதிராக பல நீதிமன்றங்களில் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் வெற்றிகரமாக 'சுமந்திரன் அண்ட் கோ'வினால் முறியடிக்கப்பட்டு விட்டது. இப்போது புதிய வழக்குத் திருவிழா மல்லாவி வர்த்தக சங்க உறுப்பினர்களுக்கு எதிராக மாங்குளம் நீதிமன்றத்தில் எடுத்து கொள்ளப்பட இருக்கின்றது.

அந்தப் பேரணி நடந்த காலத்திலிருந்த ஜனாதிபதியின் பின்னர் இப்போது மூன்றாவது ஜனாதிபதி பதவிக்கு வந்து விட்டார். ஆனால் வழக்கு புதிதாக முளைக்கிறது.

அந்தப் பேரணி சட்ட விரோதமானது அல்ல என்பது பல நீதிமன்றங்களில் நிரூபணமான பின்னர் இப்போது மீண்டும் அடுத்த பரீட்சை மாங்குளம் நீதிமன்றத்தில் தொடங்குகிறது.

இலங்கையின் நீதித்துறை இப்படி வழக்குகளைக் கையாண்டால், அவை வருடக்கணக்கில் இழுபடுவது தவிர்க்க முடியாததாகத்தான் இருக்கும்.

⋆ ⋆ ⋆

மன்னார் காற்றாலை விவகாரத்தை ஒட்டி அவற்றுக்கு எதிராக போராடும் பொது அமைப்புகளின் பிரதிநிதிகள் இன்று பிற்பகல் 3:30 மணிக்கு ஜனாதிபதியை ஜனாதிபதி செயலகத்தில் சந்திக்க இருக்கிறார்கள்.

இந்தச் சமயத்தில் ஒரு தகவலை சொல்லுவது பொருத்தமாக இருக்கும் என்று நினைக்கிறேன்.

இந்தக் காற்றாலைகள் அமைக்கப்பட்டால் இயற்கைச் சமநிலையும் மன்னார் தீவும் பெரிதும் பாதிக்கப்படும் என்று போராட்டம் நடத்துபவர்கள் கூறுகிறார்கள்.

ஆனால், அப்படி ஒன்றும் ஏற்படாது என எரிசக்தி அமைச்சர் குமார ஜெயக்கொடி தெரிவித்திருக்கின்றார்.

மன்னார் முதல் பூநகரி வடக்கு வரை தாம் பயணம் செய்தார் என்றும், அந்தப் பிரதேசம் ஒரு தரிசு நிலம் என்றும், அங்கு பறவைகளைத் தாம் காணவே இல்லை என்றும் அவர் கூறியிருக்கிறார்.

இன்று ஜனாதிபதி செயலகத்தில் நடைபெறும் கூட்டத்துக்கு அவர் வந்து, இத்தகைய கருத்தைச் சொன்னால், அவரிடம் அது தொடர்பில் ஒரு கேள்வியை நாக்கைப் பிடுங்குவதைப் போலக் கேட்பதற்கு மன்னார் பொது அமைப்புக்களின் ஒன்றியத் தலைவர் வி.எஸ்.சிவகரன் காத்திருக்கிறார் எனத் தெரிகிறது.

'வலசை வரும் பறவைகள் உட்பட பல பறவைகளும் மன்னார் மாவட்டத்தில் இல்லை என்றால், எதற்காக மன்னார் மாவட்டத்தில் 8 ஆயிரத்து 884 சதுர கிலோமீட்டர் பரப்பை பறவைகள் சரணாலயம் என்று அறிவித்து ஒதுக்கீடு செய்திருக்கிறீர்கள்?' எனக் கேட்க காத்திருக்கிறார் சிவகரன். அந்தப் பறவைகள் சரணாலய ஒதுக்கீட்டு வர்த்தமானி அறிவிப்பை ரத்து செய்யும்படி கேட்கவும் அவர் விரும்புகிறார்.

இன்றைய கலந்தாலோசனைக் கூட்டத்தில் இது போன்ற பல சுவையான சம்பவங்கள் காத்திருக்கின்றன என்று தெரிகிறது. பார்ப்போம்...!






# வேலணையில் கால்நடைகளைத் திருடி இறைச்சியாக்கி யாழ்.நகருக்கு கொண்டு செல்ல முயன்ற திருட்டுக் கும்பல்

வேலணைப் பிரதேசத்தில் கால்நடைப் பண்ணையாளர்களின் வளர்ப்புக் கால்நடைகளை திருடி இறைச்சியாக்கி, யாழ்ப்பாணம் உள்ளிட்ட பிற இடங்களுக்கு சட்டவிரோதமான முறையில் கொண்டுசென்று விற்பனை செய்துவந்த திருட்டுக் கும்பலில் ஒருவர் வேலணை வங்களாவடியில் பொதுமக்களால் பிடிக்கப்பட்டு நையப்புடைக்கப்பட்டு ஊர்காவற்றுறை பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டார்.

இந்தச் சம்பவம் நேற்று அதிகாலை 4.00 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

இச்சம்பவத்தின்போது 20 வயதுடைய இளைஞர் ஒருவரே பொதுமக்களால் பிடிக்கப்பட்டு பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் குறித்து தெரியவருபவை வருமாறு:-

வேலணைப் பிரதேசத்தில் அண்மைக் காலமாக பெறுமதிமிக்க வளர்ப்புக் கால்நடைகள் திருட்டுப்போகும் சம்பவங்கள் அதிகரித்து வரும் நிலையில் பண்ணையாளர்கள் அதனால் பெரும் பொருளாதார இழப்பையும் சந்தித்து வரும் நிலை காணப்படுகின்றது.

இந்தச் சம்பவங்கள் தொடர்பில் பொலிஸாருக்கு முறைபாடுகள் செய்தும் திட்டமிட்ட இந்த திருட்டுச் சம்பவங்களைக் கட்டுப்படுத்துவதில் பெரும் சவால் இருந்து வந்தது.

இதையடுத்து பொதுமக்கள் தமது கால்நடைகளின் பாதுகாப்பை உறுதிப்படுத்த வேலணைக்கு வரும் சந்தேகத்துக்கிடமான வாகனங்கள் மற்றும் நபர்கள் தொடர்பில் கண்காணிக்கும் செயற்பாடுகளை முன்னெடுத்து வந்தனர்.

இந்நிலையில் நேற்று அதிகாலை பட்டா ரக வாகனம் ஒன்றில் 5 பேர் அடங்கிய திருட்டுக் கும்பல் ஒன்று வங்களாவடிப் பகுதியில் சந்தேகத்துக்கிடமான முறையில் நடமாடியதை அவதானித்த மக்கள் அந்த நபர்களைப் பிடிக்க முயன்றபோது அவர்கள் தப்பியோட முயன்றுள்ளனர்.

நிலைமையை சுதாகரித்துக்கொண்ட மக்கள், பட்டா ரக வாகனத்தை மறித்து அதில் இருந்த ஒருவரை இறைச்சியாக்கப்பட்ட மாட்டுடன் பிடித்து நையப்புடைத்து பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர்.

ஏனைய நால்வர் தப்பியோடிய நிலையில் பொலிஸார் அவர்களைக் கைது செய்யும் நடவடிக்கையில் இறங்கியுள்ளனர்.

## கொலைக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ, அரசிடம் வலியுறுத்தியுள்ளார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் தெரிவிக்கையில்,

"நாளுக்கு நாள் நாடு பூராகவும் கொலைக் கலாசாரம் பரவி வருகின்றது. நேற்றும் கூட, நாட்டின் பிரதிப் பாதுகாப்பு அமைச்சரினது தேர்தல் தொகுதியான ஹோமாகம மீகொட பகுதியில் முன்னாள் உள்ளூராட்சி சபை உறுப்பினர் ஒருவர் சுட்டுப் படுகொலை செய்யப்பட்டுள்ளார். இன்றளவில் கூட அரசால் இந்தக் கொலைக் கலாசாரதைத் தடுக்க முடியாது போயுள்ளது.

தேசிய பாதுகாப்பு குறித்து ரியூசன் தருவதற்கு ஒரு நாற்காலியை எடுத்து வருமாறு தெரிவித்த பிரதிப் பாதுகாப்பு அமைச்சரின் அதிகார எல்லைக்குட்பட்ட பிரதேசத்தில் கூட இன்று கொலை இடம் பெறுகின்றது.

பாதாள உலகக் கும்பல்கள், திட்டமிட்ட அடிப்படையில் குற்றச் செயல்களில் ஈடுபடும் கும்பல்கள் மற்றும் கொலைகாரர்கள் ஆகியோர் தோட்டாக்கள், குண்டுகள், துப்பாக்கிகள், வாள்கள் போன்றவைக் காட்டியும் பயன்படுத்தியும் சமூகத்தின் கட்டுப்பாட்டை தமது பிடியில் எடுத்துள்ளனர்.

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தலைமையிலான அரசிடம் இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு உள்ளதா என்று தான் கேள்வி எழுப்புகின்றோம்.

இவ்வாறான கொலைச் சம்பவங்கள் தேசிய பாதுகாப்புக்குப் பிரச்சினையாக அமைந்து காணப்படவில்லை என்று அரசு தொடர்ச்சியாகத் தெரிவித்து வருகின்றது. நாட்டில் மக்கள் இறந்து கொண்டிருந்தால், அது தேசிய பாதுகாப்பு சார் பிரச்சினைகளில் ஒன்றாகும். தேசிய பாதுகாப்பை உறுதி செய்து, மக்களின் உயிரைப் பாதுகாப்பது ஜனாதிபதி தலைமையிலான அரசின் பொறுப்பாகும். இவ்வாறு செய்வது நாட்டுக்கான கடமை." - என்றார்.

## யாழ். மாவட்டத்தின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யாடினார்.

கல்லுண்டாய் பிரதேசத்தில் மேற்கொள்ளப்படுகின்ற கழிவகற்றல் செயற்பாடு தொடர்பாகவும், செம்மணியில் ஏற்கனவே உப்பளம் இருந்த இடத்தில் கட்டுமாணப் பணிகளை மேற்கொள்ளும் போது சாத்தியப்பாட்டு அறிக்கையைப் பெற்றுக்கொள்ளுதல், யாழ்ப்பாணத்துக்கான கழிவு முகாமைத்துவம் மற்றும் பாலியாற்றில் இருந்து யாழ்ப்பாணத்துக்கான குடிதண்ணீரைக் கொண்டு வருதல் தொடர்பாகவும் அரச அதிபருடன் சிவஞானம் கலந்துரையாடினார்.

## முரண்பாடு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவர்களது கட்சிகளைப் பாதுகாத்துக் கொள்வதில் அவதானம் செலுத்துவதே பொறுத்தமானது."

- இவ்வாறு அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள அரச தகவல் திணைக்களத்தில் நேற்று செவ்வாய்க் கிழமை நடைபெற்ற வாராந்த அமைச்சரவைத் தீர்மானங்களை அறிவிக்கும் ஊடகவியலாளர் மாநாட்டிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இதன்போது அவர் மேலும் குறிப்பிடுகையில்,

"அரசுக்குள் எந்த முரண்பாடுகளோ, பிளவுகளோ இல்லை. அது எதிர்க்கட்சிகளின் பகல் கனவாகும். அரசில் முற்போக்கானவர்களை இணைத்துக் கொண்டு ஆட்சியமைக்கத் சஜித் தயாராக இருப்பதாகத் தெரிவித்திருக்கின்றனர். இவை சில ஊடகங்களால் உருவாக்கப்படும் செய்திகளாகும். ஆனால், அவ்வாறு எந்தச் சூழலும் அரசில் இல்லை.

எந்தக் காரணத்தை அடிப்படையாகக் கொண்டும் பிரதமரைப் பதவி நீக்க நாம் எதிர்பார்க்கவில்லை. நாட்டைக் கட்டியெழுப்புவதற்காக அமைச்சரவை ஒற்றுமையுடன் ஒருமித்துச் செயற்பட்டு வருகின்றது. ஒவ்வொரு அமைச்சுக்கள் தொடர்பிலும் புரிதலுடன் செயற்பட்டு வருகின்றோம். "நீங்கள் உங்கள் கட்சிகளைப் பார்த்துக் கொள்ளுங்கள், நாம் பிளவுபடுவோம் எனப் பார்த்துக் கொண்டிருப்பதால் பிரயோசனம் இல்லை" என்று சஜித்திடமும், நாமலிடமும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

இதற்கு முன்னரும் ஜே.வி.பி., என்.பி.பிக்கு இடையில் முரண்பாடுகள் காணப்படுவதாகவும் வதந்திகள் பரப்பப்பட்டன. லால் காந்த அரசிலிருந்து விலகுவார் எனக் கூறினர். இவ்வாறான வதந்திகள் இரு நாட்கள் மாத்திரமே பெரிதாகப் பேசப்படும். ஆனால், அவற்றால் எவ்வித பிரயோசனமும் இல்லை. நாம் நாட்டின் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவதோடு, அரசியல் கலாசாரத்தையும் மாற்றுவோம்.

அவற்றைப் பார்த்துக் கொண்டு அமைதியாக இருக்குமாறு எதிர்க்கட்சிகளிடம் கேட்டுக்கொள்கின்றோம். அவர்களது பொய்களுக்குப் பதிலளிப்பது பிரயோசனமற்றது. ஆளுந்தரப்பிலுள்ள 159 உறுப்பினர்களும் முற்போக்கானவர்களே." - என்றார்.










# தூரப் பிரதேச சேவையில் ஈடுபடுகின்ற பஸ்களில் செயற்கை நுண்ணறிவு கமரா

தூரப் பிரதேசங்களுக்கு சேவையில் ஈடுபடும் பஸ்களில் செயற்கை நுண்ணறிவு கமரா கட்டமைப்பைப் பொருத்தும் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

விபத்துக்களைக் குறைக்கும் நோக்கில் இந்த திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இதற்கான அங்குரார்ப்பண நிகழ்வு கதிர்காமத்தில் போக்குவரத்து அமைச்சர் பிமல் ரத்நாயக்கவின் தலைமையில் ஆரம்பிக்கப்பட்டது.

அதற்கமைய, முதற்கட்டத்தில் 40 செயற்கை நுண்ணறிவு கமரா கட்டமைப்புகளைப் பொருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

பஸ் சாரதிகளின் நடத்தைகளைக் கண்காணிக்கவும், தேவையான எச்சரிக்கை சமிஞ்சைகளை வழங்கவும் இந்த கமராக்கள் பயன்படுத்தப்படவுள்ளன.

இந்த திட்டத்தின் கீழ் பொருத்தப்படும் செயற்கை நுண்ணறிவு கமராக்கள் ஊடாக, சாரதிக்கு ஏற்படக்கூடிய சோர்வு, மயக்கம் மற்றும் கண் மூடும் நிலைகளை அவதானிக்க முடியும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

தூரப் பிரதேசங்களுக்கான சேவையில் ஈடுபடும் அரச மற்றும் தனியார் பஸ்கள் அனைத்திற்கும் விரைவில் செயற்கை நுண்ணறிவு கமராக்கள் முழுமையாகப் பொருத்தப்படும் என துறைசார் அமைச்சு அறிவித்துள்ளது.

# தடையற்ற மருத்துவ சேவை வழங்குவதை சுகாதார அமைச்சு உறுதிப்படுத்துகின்றது

## அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவிப்பு

வைத்தியர்களின் இடமாற்ற பட்டியல் விவகாரத்தில் அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் பரிந்துரைகளையும் கவனத்தில் கொள்ளுமாறு அவர்களால் கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது எனவும் அந்த கோரிக்கையை ஏற்று மக்களுக்கு தடையற்ற மருத்துவ சேவை வழங்கப்படுவதை சுகாதார அமைச்சு உறுதிப்படுத்துவதாக அமைச்சரவை பேச்சாளர் அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று இடம்பெற்ற வாராந்த அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் ஊடகவியலாளர் மாநாட்டில் அவர் இதனைத் தெரிவித்தார்.

இது தொடர்பில் அமைச்சர் மேலும் குறிப்பிடுகையில்,

""வைத்தியர்களின் இடமாற்றங்கள் மற்றும் நியமனங்களில் பல்வேறு காரணிகள் செல்வாக்கு செலுத்துகின்றன. அவற்றின் அடிப்படையில் சில அதிகாரிகளின் செயற்பாடுகள் பொறுத்தமற்றவையாக இருக்கலாம். சில நியமனங்களின் போது தகுதியானவர்கள் தொடர்பில் மாறுபட்ட தீர்மானங்கள் எடுக்கப்படக் கூடும்.




கடந்த தேர்தல்களில் மக்கள் எமக்கு வழங்கிய ஆணைக்கமைய நாட்டைக் கட்டியெழுப்புவதற்காக ஒவ்வொரு துறைகளிலும் பொறுத்தமானவர்களுக்கு நியமனங்கள் வழங்கப்படுகிறது. எவ்வாறிருப்பினும் சில சந்தர்ப்பங்களில் சிலருக்கு அநீதி இழைக்கப்பட்டுள்ளது. இவை தொடர்பில் ஆராயப்பட்டு வருகிறது. சுகாதார அமைச்சினை பொதுப்படுத்த வேண்டிய தேவை இல்லை.

மருத்துவ அதிகாரிகள் சங்கம் முன்வைத்துள்ள சில கோரிக்கைகள் உள்ளன. அவை தொடர்பில் அந்த சங்கத்துடன் பல சுற்று பேச்சுவார்த்தைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. இடைநிலை வைத்தியர்களுக்கான நியமனத்தின் போது அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் பரிந்துரைகளையும் கவனத்தில் கொள்ள வேண்டும் என்பதே அவர்களின் பரிந்துரையாக இருந்தது.

அந்த வகையில் பேச்சுவார்த்தைகள் முன்னெடுக்கப்படுகின்றன. இதில் அதிகாரிகள் பிரச்சினையல்ல. சுகாதார அமைச்சினால் இந்த பிரச்சினைகளுக்கு தீர்வு வழங்கப்படும். பேச்சுவார்த்தைகள் விடயம் குறித்த அறிவுடன் முன்னெடுக்கப்பட்டால் பிரச்சினைகளைத் தவிர்த்துக் கொள்ள முடியும்."" என்றார்.



# ரூ. 7 கோடி பெறுமதியான 2,284 கிலோ கேரளக் கஞ்சா சங்குப்பிட்டி - அறுகுவெளி காட்டுப் பகுதியில் சிக்கியது!

(த.சுபேசன்)

சாவகச்சேரிப் பொலிஸ் பிரிவுக் குட்பட்ட சங்குப்பிட்டி-அறுகுவெளி காட்டுப் பகுதியில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை பிற்பகல் 7கோடி ரூபா பெறுமதியான 2,284கிலோ கேரளக் கஞ்சா போதைப்பொருள்கள் சாவகச்சேரிப் பொலிஸாரால் கைப் பற்றப்பட்டுள்ளன.

126 பொட்டலங்களாக பொதி செய்யப்பட்ட 2284கிலோ கிராம் கஞ்சா போதைப்பொருளே இதன்போது கைப் பற்றப்பட்டுள்ளது.

இதன்போது இரண்டு சந்தேக நபர்களையும் பொலிஸார் கைது செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

கடல் வழியாக எடுத்துவரப்பட்ட கஞ்சாப் பொதிகளே இவ்வாறு பொலிஸ ாரால் மீட்கப்பட்டுள்ளன.

சாவகச்சேரிப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி பாலித செனவிரட்ன தலைமையிலான குழுவினர் மேற்படி கைது நடவடிக்கையை முன்னெடுத் துள்ளமை குறிப்பிடத்தக்கது.









# ஊர்காவற்றுறையில் நிலத்திற்குள் புதைக்கப்பட்டு பதுக்கப்பட்ட 40 கிலோவிற்கும் அதிகமான கஞ்சா

## மன்னாரிலிருந்து வந்த சிறப்புப் பொலிஸ் குழு மீட்டது

யாழ்ப்பாணம் ஊர்காவற்றுறை பகுதியில் சுமார் 40 கிலோவிற்கும் அதிகமான கஞ்சா போதைப்பொருள் நிலத்திற்கு கீழ் பதுக்கி வைக்கப்பட்டி ருந்த நிலையில் மீட்கப்பட்டுள்ளது.

ஊர்காவற்றுறை கடற்கரை பகுதியில் நிலத்தில் பாரிய கிடங்கு வெட்டி அதனுள் பெருமளவான கஞ்சா போதைப்பொருள் பதுக்கி வைக்கப்பட்டுள்ளதாக மன்னார் பொலிஸாருக்குக் கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில், அந்த இடத்திற்கு மன்னாரில் இருந்து வருகை தந்த சிறப்புப் பொலிஸ் குழுவினர் சென்று நிலத்தின் கீழ் புதைத்து வைத் திருந்த கஞ்சாவை மீட்டுள்ளனர்.

இந்த கஞ்சாப் போதைப்பொருளை இந்தியாவில் இருந்து படகு மூலம் கடத்தி வந்து, அவற்றை கடற்கரையை அண்டிய பகுதியில் நிலத்தில் புதைத்து வைத்திருக்கலாம் என ஆரம்ப கட்ட விசாரணைகளில் தெரிய வந்துள் ளதாகப் பொலிஸார் தெரிவித்துள்ள னர்.

இந்த கஞ்சாப் போதைப்பொருளுடன் தொடர்புடைய நபர்கள் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை ஆரம் பித்துள்ளனர்

நமது கருத்து
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# சிறப்புரிமைகள் 'அவுட்'!

முன்னாள் ஜனாதிபதிகளுக்கு வழங்கப்பட்டுள்ள சிறப்புரிமைகள், வசதிகளை ரத்து செய்யும் சட்டமூலம் வர்த்தமானியில் உத்தியோகபூர்வமாக வெளியாகியுள்ள நிலைமையில் அதனை எதிர்த்து உயர் நீதிமன்றத்தில் மனு ஒன்று தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவை சேர்ந்த ரேணுகா பெரேரா இந்த மனுவை தாக்கல் செய்துள்ளார்.

இந்தப் புதிய சட்டப் பிரேரணையை அரசாங்கம் கடந்த ஏழாம் திகதி நாடாளுமன்ற நிகழ்ச்சி நிரலில் இணைத்துள்ளது.

முன்மொழியப்பட்ட இந்தச் சட்டமூலத்தின் பிரிவுகள் 01 முதல் 04 வரையுள்ள விடயங்கள் ஏற்கனவே அரசமைப்பால் உத்தரவாதம் அளிக்கப்பட்ட அதிகாரங்களைப் பிரிக்கும் கொள்கையை மீறுவதாகவும் மனுதாரர் தமது மனுவில் சுட்டிக்காட்டியுள்ளார்.

மேலும், இந்தச் சட்டமூலத்தில் உள்ள பல பிரிவுகள் நாட்டின் அரசமைப்பால் உத்தரவாதம் அளிக்கப்பட்ட மக்களின் இறையாண்மையை மீறுகின்றன என்றும், முழு அரசமைப்பின் அடிப்படைக் கொள்கைகளையும் மீறுவதாக அமைந்துள்ளன எனவும் மனுதாரர் குறிப்பிட்டுள்ளார்.

பொதுவாக இத்தகைய சட்டமூலங்கள் தொடர்பில் விசாரணை செய்யும் உயர் நீதிமன்றம் மூன்று விதமான தீர்ப்புகளை வழங்குவதற்கு வாய்ப்பு உண்டு.

ஒன்று - சம்பந்தப்பட்ட சட்டமூலம் அரசமைப்பின் எந்த ஏற்பாடுகளுக்கும் முரணானது அல்ல என்பதனால் நாடாளுமன்றத்தில் சாதாரண பெரும்பான்மை மூலமே அதனை நிறைவேற்றி சட்டமாக்க முடியும் என்று உத்தரவிடலாம்.


அடுத்தது - அரசமைப்பின் முக்கியமான அடிப்படைக் கோட்பாடுகளை சட்ட மூலம் அல்லது அதன் சில பிரிவுகள் மீறுகின்றமையால் இந்தச் சட்டமூலத்தை நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மையோடு நிறைவேற்றுவது கட்டாயம் எனத் தீர்ப்பளிக்கலாம்.

மூன்றாவது - அரசமைப்பின் பிரதான கட்டமைப்புகளையும் கோட்பாடுகளையும் இந்தச் சட்டமூலம் மீறுவதால் நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மையுடன் நிறைவேற்றுவதுடன் சர்வஜன வாக்கெடுப்பு ஒன்றின் மூலம் மக்களின் அங்கீகாரத்தையும் அனுமதியையும் பெற வேண்டும் என உத்தரவு வழங்கலாம்.

இத்தகைய மூன்று வகையான தீர்ப்பில் ஒன்றையே உயர்நீதிமன்றம் வழங்கும். முதல் இரண்டு வகைகளில் ஒன்றின் அடிப்படையில் தீர்ப்பு வெளியானால் அதனை தற்போதைய அரசினால் இலகுவாக நிறைவேற்றிக் கொள்ள முடியும். மூன்றாவது விடயத்தை உயர் நீதிமன்றம் வலியுறுத்தினால் அந்தச்சட்டமூலத்தை நிறைவேற்றுவது சிக்கலாகும். சர்வஜன வாக்கெடுப்பு மூலம் மக்கள் அனுமதி பெற வேண்டி இருக்கும்.

தற்போது பிரேரிக்கப்பட்டுள்ள இந்தச் சட்ட மூலம் - ஜனாதிபதிகளுக்கு வழங்கப்படும் சிறப்பு உரிமைகளை ரத்து செய்யும் இந்தச் சட்டமூலம் - பெரும்பாலும் மூன்றாவது வகைக்குள் வரவேமாட்டாது என்பதுதான் சட்டநிலைமை.

ஆகையினால் இந்த சட்டமூலம் இலகுவாக நாடாளுமன்றத்தில் நிறைவேறி நடைமுறைக்கு வரும் என்பதுதான் இப்போதுள்ள கள நிலைமையாகும்.



# பிரதிப் பாதுகாப்பு அமைச்சருக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை கையளிப்பு

## மனோ, ராதா, அர்ச்சுனாவும் கையொப்பம்

பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் அருண ஜயசேகரவுக்கு எதிரான நம்பிக்கை யில்லாப் பிரேரணை, சபாநாயகரிடம் நேற்று மதியம் கையளிக்கப்பட்டுள்ளது.

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ உட்பட 32 எதிரணி எம்.பிக்கள் நம்பிக்கையில்லாப் பிரேரணை யில் கையொப்பமிட்டுள்ளனர்.

நாடாளுமன்ற உறுப்பினர்களான மனோ கணேசன், வே.இராதா கிருஷ்ணன், இ.அர்ச்சுனா ஆகிய தமிழ் எம்.பிக்களின் கையொப்பங்களும் உள்ளன.

# கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் திணைக்களத்தின் யாழ். மாவட்ட உதவிப் பணிப்பாளராக அகிலன் நியமனம்

(ந.லோகதயாளன்)

கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் திணைக்களத்தின் யாழ்ப்பாணம் மாவட்ட உதவிப் பணிப்பாளராக அகிலன் நியமிக்கப்பட்டுள்ளார்.

கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தால் இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

இதேவேளை, ஏற்கனவே கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் திணைக்களத்தின் யாழ். மாவட்ட உதவிப் பணிப்பாளராக இருந்த ஜே.சுதாகரன், முல்லைத்தீவு மாவட்ட உதவிப் பணிப்பாளராக இடமாற்றப் பட்டுள்ளார்.

முல்லைத்தீவில் உதவிப் பணிப்பாளராகப் பணியாற்றிய மோகன் கிளிநொச்சி மாவட்டத் திணைக்களத்தில் இணைக்கப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாணம் மாவட்டத்துக்கு உதவிப் பணிப்பாளராக நியமிக்கப்பட்டுள்ள அகிலன் அண்மையில் கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் திணைக்களம் நடத்திய உதவிப் பணிப்பாளர்களுக்கான தேர்வில் சித்தியடைந்த இரு தமிழ் அதிகாரிகளில் ஒருவர் என்பது குறிப்பிடத்தக்கது.





# மலேசிய உயர்ஸ்தானிகர் ஜனாதிபதியை சந்தித்தார்

ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்கவிற்கும் இலங்கைக்கான மலேசிய உயர்ஸ்தானிகர் பத்லி ஹிஷாம் பின் ஆதமுக்கும் இடையிலான சந்திப்பு நேற்று ஜனாதிபதி அலுவலகத்தில் இடம்பெற்றது.

இலங்கைக்கும் மலேசியாவுக்கும் இடையிலான நெருங்கிய உறவுகளை மேலும் வலுப்படுத்துவது தொடர்பில் இதன்போது இரு தரப்பினரும் கவனம் செலுத்தினர் என ஜனாதிபதி ஊடகப்பிரிவு அறிவித்துள்ளது.

விசேடமாக மலேசியாவின் சுற்றுலா, வர்த்தகம் மற்றும் கல்வி ஆகிய துறைகள் மற்றும் அண்மைய கால வெற்றிகள் குறித்த தனது அனுபவங்களை இலங்கையுடன் பகிர்ந்து கொள்ளத் தயாராக இருப்பதாக மலேசிய உயர் ஸ்தானிகர் இங்கு தெரிவித்தார்.

இந்நிகழ்வில் ஜனாதிபதியின் செயலாளர் கலாநிதி நந்திக சனத் குமாரநாயக்க மற்றும் ஜனாதிபதியின் சிரேஷ்ட மேலதிக செயலாளர் ரோஷன் கமகே ஆகியோரும் கலந்து கொண்டனர்.



# மட்டுவில் பொருளாதார மத்திய நிலையம் செப்ரெம்பர் இறுதிக்குள் திறக்கப்படுமாம்

தென்மராட்சி மட்டுவிலில் அமைக்கப்பட்டுள்ள பொருளாதார மத்திய நிலையம் செப்ரெம்பர் இறுதிக்குள் திறந்து வைக்கப்படும் என கைத்தொழில் மற்றும் வணிக அமைச்சர் வசந்த சமரசிங்க தெரிவித்தார்.

மட்டுவிலில் அமைந்துள்ள கைத்தொழில் நிலையத்தை நேற்றுக் காலை பார்வையிட்ட அமைச்சர் மற்றும் பிரதி அமைச்சர், ஆளுநர் உள்ளிட்ட குழுவினர் யாழ்ப்பாண மாவட்ட செயலகத்தில் அதனை ஆரம்பிப்பது தொடர்பான கலந்துரையாடலை மேற்கொண்டனர்.

இதன் போது வர்த்தகர்கள், நாடாளுமன்ற உறுப்பினர் க.இளங்குமரன், யாழ்ப்பாணம் மாவட்ட அரசாங்க அதிபர் ம.பிரதீபன், மாநகர சபை ஆணையாளர், அமைச்சின் அதிகாரிகள், மாவட்ட செயலக உத்தியோகத்தர்கள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

இதில் கருத்து தெரிவித்த அமைச்சர், கடந்த அரசாங்கம் பல தடவைகள் ஆரம்பிப்பதாக தெரிவித்த மட்டுவில் பொருளாதாரம் மத்திய நிலையம் அடுத்த மாதம் இறுதிக்குள் திறந்து வைக்கப்படும் என தெரிவித்தார்.

மேலும் வர்த்தகர்கள் எதிர்கொள்ளும் பாதுகாப்புப் பிரச்சினைகள், பொருளாதார மத்திய நிலையத்தில் காணப்படும் குடிதண்ணீர் உள்ளிட்ட அடிப்படை வசதிகளை மேம்படுத்தல் உள்ளிட்ட விடயங்களும் கலந்துரையாடப்பட்டன.

இதனைத் தொடர்ந்து அமைச்சர்களின் ஊடக சந்திப்பு இடம் பெற்றது.

பொருளாதார மத்திய நிலையம் திறந்து வைத்தல் தொடர்பாகவும், முல்லைத்தீவில் இராணுவத்தினால் ஒருவர் கொலை செய்யப்பட்டதாக சந்தேகப்படும் விடயம் தொடர்பாகவும் அது தொடர்பில் முன்னெடுக்கப்படவுள்ள ஹர்த்தால் தொடர்பாகவும் ஊடக சந்திப்பில் கருத்துத் தெரிவிக்கப்பட்டது.

















தொடர்ச்சி

தொடர்ச்சி ▲



# மட்டுவில் பொருளாதார மத்திய நிலையம் செப்ரெம்பர் இறுதிக்குள் திறக்கப்படுமாம்















# மக்களுக்கு அச்சுறுத்தலாக இருக்கும் படையினரை உடன் வெளியேற்றுங்கள் என சுரேஷ் வலியுறுத்து!



யுத்தம் ஏதுமற்ற சூழலில் அப்பாவி மக்களை இராணுவ முகாமிற்கு அழைத்துக் கொலை செய்து ஈவிரக்கமின்றி குளக்கரையில் வீசிய இராணுவத்தினர் மக்களுக்கு அச்சுறுத்தலாக இருக்கின்றனர் என்றும், நாட்டின் சிவில் உரிமைகளைப் பாதுகாக்க சிவில் நிர்வாகம் அவசியம் என்றும் வலியுறுத்தியுள்ள ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தலைவர் சுரேஷ் க. பிரேமச்சந்திரன் மக்களின் இயல்பு வாழ்க்கைக்கு அச்சுறுத்தலாக உள்ள படையினர் வெளியேற்றப்பட வேண்டும் என்றும் வலியுறுத்தியுள்ளார்.

இது குறித்து அவர் விடுத்துள்ள அறிக்கையின் முழுவிபரம் வருமாறு:-

கடந்த 7ஆம் திகதி வியாழன் இரவு முல்லைத்தீவு மாவட்டம் முத்தையன் கட்டைச் சேர்ந்த ஐந்து இளைஞர்கள் அப்பகுதியிலுள்ள 66ஆம் படையணியைச் சேர்ந்த இராணுவத்தினரால் வரவழைக்கப்பட்டு மிக மோசமான முறையில் தாக்கப்பட்டுள்ளனர். இதில் ஒருவர் மோசமான முறையில் தாக்குதலுக்குள்ளாகி மக்களால் மீட்கப்பட்டு வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்ட நிலையில் மூவர் இராணுவத்தினரில் பிடியிலிருந்து தப்பி ஓடியுள்ளனர். ஒருவரின் நிலை தெரியாத நிலையில் எட்டாம்திகதி காலை முத்தையன்கட்டு குளத்திலிருந்து சடலமாக மீட்கப்பட்டுள்ளார். இவர் இராணுவத்தினரால் தாக்கப்பட்டு கொலை செய்யப்பட்டதன் பின்னர் குளத்தில் வீசப்பட்டிருக்கலாம் என்று மக்கள் நம்புகின்றனர்.

யுத்தம் முடிந்த காலத்திலிருந்து வடக்கு – கிழக்கு என்பது இன்னமும் இராணுவ கட்டுப்பாட்டிற்குள்ளேயே இருக்கின்றது. மூன்றில் இரண்டிற்கும் மேற்பட்ட படையினர் வடக்கு – கிழக்கிலேயே நிலைநிறுத்தப்பட்டுள்ளனர். குறிப்பாக முல்லைத்தீவில் ஆறு பொதுமக்களுக்கு ஒரு இராணுவம் என்ற ரீதியில் இராணுவம் அங்கு நிலைகொண்டுள்ளது.

யுத்தம் முடிந்து 15வருடங்கள் பூர்த்தியாகியிருக்கின்ற சூழலில் இவ்வளவு பெருந்தொகையான இராணுவமும் முகாம்களும் வடக்கு-கிழக்கில் தேவையா என்ற கேள்வி தொடர்கின்றது. மக்களுக்குச் சொந்தமான பல்லாயிரக்கணக்கான ஏக்கர் நிலங்கள் இன்னும் இராணுவத்தின் கட்டுப்பாட்டிற்குள் இருக்கின்றன. யுத்தம் முடிந்ததன் பின்னர் வடக்கு-கிழக்கில் ஆயுத ரீதியான அசம்பாவிதங்கள் எதுவும் நிகழ்ந்ததாக இதுவரை எவ்வித வெளிப்படுத்தல்களும் இல்லை. மாறாக, தென்பகுதியில் நாளாந்தம் துப்பாக்கிச் சூடும் அதனால் கொலைகளும் நடந்துகொண்டிருக்கின்றன. இந்நிலையில் வடக்கு-கிழக்கில் சிவில் நிர்வாகத்தைக் கவனிப்பதற்கு பொலிஸாரே போதுமானவர்களாக இருக்கின்ற பொழுது தொடர்ந்து இராணுவத்தினரை அதிகமாகக் குவித்து வைத்திருப்பதும் நாம் என்ன செய்தாலும் சட்டம் எம்மை ஒன்றும் செய்யாது என்ற நம்பிக்கையும் இராணுவத்தினர் எல்லைமீறிச் செல்வதற்கும் கொலை செய்வதற்கும் காரணமாக அமைகின்றது.

இராணுவத்தினர் தொடர்பாகவும் அவர்களது சட்டவிரோத செயற்பாடுகள் தொடர்பாகவும் தமிழ் மக்கள் மத்தியில் பெருமளவிலான அவநம்பிக்கைகள் இருக்கின்றன. வடக்கில் நடைபெறுகின்ற போதை வஸ்த்துகள் கடத்தல், வியாபாரம் தொடர்பாக படையினருக்கும் கடத்தல்காரர்களுக்கும் இடையில் மறைமுக தொடர்புகள் இருக்கின்றன எனக் குற்றம்சாட்டப்படுகின்றது. படையினர் தொடர்பில் யுத்தத்தின் பின்னர் இத்தகைய குற்றச்சாட்டுகள் இருப்பினும்கூட, இதுவரை ஆக்கபூர்வமான விசாரணைகளோ இவற்றைக் கட்டுப்படுத்துவதற்கான பொறிமுறைகளோ இதுவரை முன்னெடுக்கப்பட்டனவாக் இதுவரை நாம் அறியவில்லை.

இந்த அரசாங்கம் பதவிக்கு வந்தபொழுது தமிழ் மக்களுக்குரித்தான காணிகள் அனைத்தும் விடுவிக்கப்படும் என்றும், பயங்கரவாத தடைச்சட்டம் நீக்கப்படும் என்றும், பல்வேறு உறுதிமொழிகள் கொடுத்திருந்தாலும்கூட காணிகள் எதுவும் விடுவிக்கப்படவில்லை என்பதுடன் இக்காணிகளில் குடியிருக்கும் இராணுவத்தினரின் அடாவடித்தனங்களும் குறையவில்லை.

எதிர்மன்னசிங்கம் கபில்ராஜ் என்பவர் ஒரு குழந்தையின் தந்தையாவார். அவரது மனைவி இப்பொழுது கணவனை இழந்து விதவையாக்கப்பட்டுள்ளமைய்ஜ்டன் அவரதும் அவரது குழந்தையின் எதிர்காலமும் கேள்விக்குள்ளாக்கப்பட்டுள்ளது. இந்த அடிப்படையில் ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி அரசாங்கத்திடம் பின்வரும் விடயங்களை முன்வைக்கின்றது:-

1. கபில்ராஜின் மனைவிக்கும் அவரது குழந்தைக்கும் அவரது எதிர்காலத்திற்குப் போதுமான நட்டஈட்டை வழங்க வேண்டும்.

2. அரசாங்கம் தமிழ் மக்களுக்கு உறுதியளித்தவாறு படையினர் குடியிருக்கும் தமிழ் மக்களுக்குச் சொந்தமான அனைத்து காணிகளும் விடுவிக்கப்பட வேண்டும்.

3. மக்களுக்கு அச்சுறுத்தலாக இருக்கும் படைத்தரப்புகள், வடக்கு-கிழக்கிலிருந்து வெளியேற்றப்பட வேண்டும்.

4. தாங்கள் என்ன குற்றம் செய்தாலும் தப்பித்துக்கொள்ளும் படையினரின் எண்ணத்தை மாற்றும் முகமாக இதில் சம்பந்தப்பட்ட படையினருக்கு கொலைக் குற்றத்திற்கான உச்சபட்ச தண்டனை வழங்கப்படவேண்டும்.

5. கடந்த அரசுகளைப் போலல்லாமல் இன, மத பேதமற்ற சமத்துவ சமுதாயம் ஒன்றைப் பேசக்கூடிய ஜே.வி.பி. – என்.பி.பி. அரசாங்கம் தகுந்த நடவடிக்கைகளை எடுத்து தமிழ் மக்கள் மத்தியில் நம்பிக்கையை ஏற்படுத்தும் வகையில் செயற்படும் என்று எதிர்பார்க்கின்றோம். – என்று உள்ளது.

# மடுத் திருவிழா தினத்திலிருந்து ஹர்த்தாலை மாற்றியமைக்கக் கோருகின்றார் குருமுதல்வர்

(வாஸ் கூஞ்ஞ)

ஆவணி மாதம் 15ஆம் திகதி மடுத்திருத்தலத்தின் பிரதான திருவிழா அன்று வடக்கு கிழக்கில் அறிவிக்கப் பட்டிருக்கும் ஹர்த்தாலை ஏற்றுக் கொள்ள முடியாது.

தேசிய ரீதியில் இலங்கையின் அனைத்துப் பாகங்களிலும் இருந்தும் இலட்சக்கணக்கான மக்கள் வருகை தரும் திருவிழா நாளில் இந்தக் ஹர்த் தாலை ஏற்பாடு செய்திருப்பதானது ஏற்றுக்கொள்ள முடியாதது மட்டுமல்ல, கண்டனத்திற்கும் உரியது என மன்னார் மறைமாவட்டக் குருமுதல்வர் அருட்திரு. தமிழ்நேசன் அடிகளார் அறிக்கை ஒன்றில் தெரிவித்திருக்கின்றார்.

நேற்றுப் பகல் மன்னார் குருமுதல் வரை இல்ங்கைத் தமிழரசுக் கட்சியின் செயலாளர் எம்.ஏ.சுமந்திரன் நேரில் மடுத் திருப்பதிக்குச் சென்று சந்தித்துக் கலந்துரையாடிய பின்னர், ஹர்த்தாலை 18 ஆம் திகதிக்குத் தள்ளிவைக்கும் அறிவிப்பை விடுத்திருந்தார்.

தற்போது வெளியாகும் மன்னார் மறைமாவட்டக் குருமுதல்வரின் இந்த அறிக்கை அதற்கு முன்னர் வெளியிடப் பட்டதாக இருக்கும் எனக் கருதப்ப டுகின்றது.

அந்த அறிக்கையில் மேலும் தெரி விக்கப்பட்டிருப்பவை வருமாறு:-

ஹர்த்தாலுக்கான காரணங்களை நாம் ஏற்றுக்கொள்கிறோம். அதற்கு நாம் ஆதரவாக இருக்கின்றோம்.



இன்று மட்டுமல்ல மன்னார் ஆயர் இராயப்பு யோசேப்பு ஆண்டகை அவர் கள் காலத்திலும் மன்னார் மறை மாவட்டத் திருச்சபை, குறிப்பாக மன் னார் குருக்கள் ஆயரோடு இணைந்து தமிழ் மக்களின் உரிமைகளுக்காக குரல்கொடுத்துள்ளனர்.

தமிழ் மக்களுக்கு இழைக்கப்பட்ட அனைத்து வகையான அநீதிகளுக்கு எதிராகவும் போராடியுள்ளனர். இதை முழு உலகமும் அறியும். இந்த நிலை யில் மடுத்திருப்பதியின் ஆவணித் திருவிழாவை கவனத்தில் கொள்ளாமல் - இலங்கைவாழ் கத்தோலிக்க மக்களின் உணர்வுகளைப் புரிந்துகொள்ளாமல் - எடுக்கப்பட்ட இத்தீர்மானம் எமக்கு மிகுந்த கவலை அளிப்பதாகவும் ஏமாற்றம் அளிப்பதாகவும் உள்ளது.

இவ்வேளையில் வரலாற்று ரீதியான சில விடயங்களையும் சுட்டிக்காட்ட விழைகின்றோம். யுத்தம் உக்கிரமாக நடைபெற்றுக்கொண்டிருந்த காலத்தில் கூட மடுத்திருப்பதியின் திருவிழாக் களுக்கு எந்தப் பாதிப்பும் ஏற்படவில்லை.

அன்றைய அரசாங்கங்களும் சரி, தமிழீழ விடுதலைப் புலிகளும் சரி, இத்திருவிழாக்களை எந்த இடையூறும் இல்லாமல் நடத்துவதற்கு தமது பூரண ஆதரவை, ஒத்துழைப்பை வழங்கிவந்த னர் என்பதை இவ்வேளையில் சுட்டிக் காட்ட விரும்புகின்றோம்.

இலங்கைத் தமிழரசுக் கட்சியினால் - குறிப்பாக முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் திரு. சுமந்திரன் அவர்களி னால் - ஏற்பாடு செய்யப்பட்டிருக்கும் இந்த ஹர்த்தாலை திருவிழாவுக்குப் பின்னர் வேறொரு நாளுக்கு பின்போடு மாறு வினயமாக வேண்டுகோள் விடுக்கின்றோம்.

புதிய திகதிக்கு இந்த ஹர்த்தால் மாற்றப்படும்போது வழக்கம்போல மன்னார் மறைமாவட்டத் திருச்சபை இதற்கான பூரண ஆதரவை வழங்கும் என்பதையும் இந்த நேரத்தில் தெரிவித் துக்கொள்கிறோம்.

எமது இந்தக் கோரிக்கையை ஏற்று உடனடியாக புதிய திகதியை அறிவிக்கு மாறு திரு. சுமந்திரன் அவர்களை அன்போடு கேட்டுக்கொள்கிறோம். - என மன்னார் மறைமாவட்ட குரு முதல்வர் கிறிஸ்துநேசன் அடிகளார் தனது ஊடக அறிக்கையில் தெரி வித்துள்ளார்.



# குளவிக் கொட்டுக்கு இலக்கான 3 பேர் லிந்துல்ல வைத்தியசாலையில் சேர்ப்பு

(செ.தி.பெருமாள்)

குளவிக் கொட்டுக்கு இலக்கான மூன்று பேர் லிந்துல்ல வைத்திய சாலையில் நேற்றுச் சேர்க்கப்பட் டுள்ளனர்.

இந்தக் குளவிக் கொட்டுச் சம்பவம் நேற்று மாலை 3 மணிக்கு தலவாக்கலை ரயில் நிலையத்திற்கு அருகில் இடம் பெற்றுள்ளது.

தலவாக்கலை நகரில் இருந்து ரயில் நிலைய வீதியூடாகச் சென்றவர்களில் மூன்று பேர் இவ்வாறு குளவிக் கொட் டுக்கு இலக்கான நிலையில் லிந்துல்ல வைத்திய சாலையில் சேர்க்கபட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர்.

அவர்களில் ஒருவர் மேலதிக சிகிச் சைக்காக நுவரெலியா மாவட்ட வைத் தியசாலைக்கு மாற்றம் செய்யப்படவுள் ளார் என லிந்துல்ல வைத்தியசாலையில் உள்ள வைத்திய அதிகாரி ஒருவர் தெரிவித்தார். ரயில் பாலத்தில் கட்டபட்டு இருந்த குளவிக் கூடு களைந்தால் இந்த அனர்த்தம் ஏற்பட்டுள்ளது என பாதிக்கப்பட்டவர்கள் தெரிவித்தனர்.




# மட்டக்களப்பில் அரச வங்கி ஊழியர்களின் ஒன்றிணைந்த தொழிற்சங்கம் கவனவீர்ப்பு

(கனகராசா சரவணன்)

அரச வங்கிகள் மீது மத்திய வங்கியால் திணிக்கப்பட்ட சில தடைகளை நீக்கக் கோரி அரச வங்கி ஊழியர்களின் ஒன்றினைந்த தொழிற்சங்கக் கூட்டமைப்பினர் நேற்று செவ்வாய்க்கிழமை மட்டக்களப்பு காந்தி பூங்காவில் கவனவீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

மட்டக்களப்பு மாவட்ட தொழிற்சங்கக் கூட்டமைப்பின் தலைவர் பே.கவாஸ்கரன் தலைமையில் ஏற்பாடு செய்யப்பட்ட இந்த கவனவீர்ப்புப் போரட்டம் பகல் 12.30 மணிக்கு ஆரம்பமாகியது. இதில் கலந்துகொண்ட அரச வங்கி ஊழியர்கள் 1996 இற்கு பின்னைய ஓய்வூதியக் கொடுப்பனவு முறையின் உத்தேசத் திருத்தங்களை உடன் செயற்படுத்துக, அரச வங்கிகளின் ஊழியர் உரிமைகள் கத்திரிப்பதற்கு எதிராக அணிதிரள்வோம், ஓய்வூதியக் கொடுப்பனவு முறை இல்லாத அரச வங்கிகளில் அந்த உரிமைகளை உடன் நிறுத்துக, எச்.டி.எவ்.சி. மற்றும் எஸ்.எம்.ஐ.பி. வங்கிகளின் பிரச்சினைகளை உடன் தீர்க்குக – போன்ற சுலோகங்கள் அடங்கி. பதாகைகளை ஏந்தியவாறு கோஷங்கள் எழுப்பி, ஆர்பாட்டத்தில் சுமார் 30 நிமிடம் ஈடுபட்ட பின்னர் அங்கிருந்து கலைந்து சென்றனர்.
















# இலங்கையில் பாரிய அளவிலான முதலீடுகளை மேற்கொள்ள தயார்

## வியட்நாமின் ரொக்ஸ் குழுமம் ஜனாதிபதியிடம் தெரிவிப்பு

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க மற்றும் வியட்நாமின் ரொக்ஸ் குழுமத்தின் ஆலோசனைக் குழுவின் தலைவர் மற்றும் கடல்சார் வணிக கூட்டு பங்கு வங்கியின் தலைவர் டிரன் அன் துவன் உள்ளிட்ட பிரதிநிதிகளுக்கு இடையிலான கலந்துரையாடல் நேற்று பிற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் இடம்பெற்றது.

இலங்கையில் தற்போதைய ஸ்திரத்தன்மை மற்றும் முதலீட்டாளர்களுக்கு உகந்த சூழலைக் கருத்தில் கொண்டு, இலங்கையில் முதலீடு செய்யத் தயாராக இருப்பதாக ரொக்ஸ் நிறுவனத்தின் பிரதிநிதிகள் இங்கு தெரிவித்தனர்.

அதன்படி, இந்நாட்டில் ஒரு தொழில்துறை வலயத்தை நிறுவுவதற்கு அரசாங்கத்தின் ஆதரவை எதிர்பார்ப்பதாக அவர்கள் தெரிவித்தனர்.

அதேபோன்று புதுப்பிக்கத்தக்க வலுசக்தி மற்றும் ஆதன விற்பனைத் துறைகளில் முதலீடு செய்ய எதிர்பார்ப்பதாகவும் அவர்கள் ஜனாதிபதியிடம் தெரிவித்தனர்.

அதனுடன் தொடர்புடைய நடவடிக்கைகளுக்காக காணியை அடையாளம் காணவும், தேவையான நிறுவன ஆதரவைப் பெறவும் இந்த விஜயத்தை மேற்கொள்வதாக அவர்கள் தெரிவித்தனர்.

இங்கு கருத்துத் தெரிவித்த ஜனாதிபதி, இலங்கையில் ஊழல் இல்லாத சூழல் உருவாக்கப்பட்டுள்ளதால், முதலீடுகளுக்கு நிறுவன மட்டத்தில் சாத்தியமான அனைத்து ஆதரவையும் வழங்க அரசாங்கம் தயாராக உள்ளது என்றும் தெரிவித்தார்.



அத்துடன், இலங்கையின் தற்போதைய நிலைமை குறித்து மிகவும் மகிழ்ச்சியடைவதாகவும், இந்நாட்டில் பாரிய அளவிலான முதலீடுகளுக்குத் தயாராக இருப்பதாகவும் ரொக்ஸ் குழுமத்தின் தலைவர் உட்பட ஏனைய பிரதிநிதிகள் தெரிவித்தனர் என ஜனாதிபதி ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

இந்த நிகழ்வில் ரொக்ஸ் குழுமத் தலைவர் குயென் தி குயெட் ஹுவொங், பிரதான அதிகாரி (வலுசக்திப் பிரிவு) லு லெ சி ஆகியோருடன் ஜனாதிபதியின் செயலாளர் கலாநிதி நந்திக சனத் குமாநாயக்க மற்றும் ஜனாதிபதியின் சிரேஷ்ட மேலதிக செயலாளர் ரோஷன் கமகே ஆகியோரும் கலந்து கொண்டனர்.









# அவுஸ்திரேலிய உயர் ஸ்தானிகர் ஜனாதிபதி அநுரவை சந்தித்தார்

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க விற்கும் இலங்கைக்கான அவுஸ்திரேலிய உயர்ஸ்தானிகர் போல் ஸ்டீபன்ஸ் ஆகியோருக்கு இடையிலான சந்திப்பு நேற்று பிற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் இடம்பெற்றது.

தனது பதவிக்காலம் நிறைவடைந்து இலங்கையை விட்டு வெளியேறும் போல் ஸ்டீபன்ஸின் எதிர்கால செயற்பாடுகளுக்கு ஜனாதிபதி வாழ்த்துத் தெரிவித்தார்.

இந்நாடு எதிர்கொண்ட பொருளாதார நெருக்கடியின் போதும் அதற்குப் பின்னரும் அவுஸ்திரேலிய உயர் ஸ்தானிகர் வழங்கிய ஆதரவை ஜனாதிபதி இதன்போது பாராட்டினார்.

மேலும், கடந்த காலங்களில் அவுஸ்திரேலிய இராஜதந்திரிகள் பலர் இந் நாட்டிற்கு விஜயம் செய்ததை நினைவு கூர்ந்த ஜனாதிபதி, அவுஸ்திரேலியா விற்கும் இலங்கைக்கும் இடையிலான உறவுகளை மேலும் வலுப்படுத்துவதில் உயர் ஸ்தானிகர் வழங்கிய ஆதரவைப் பாராட்டினார்.

இந்நாட்டு சுற்றுலா, கல்வி மற்றும் தொழிற்கல்வி போன்ற துறைகளின் வளர்ச்சிக்கு அவுஸ்திரேலியா தொடர்ந்தும் ஆதரவளிக்கும் என்று அவுஸ்திரேலிய உயர் ஸ்தானிகர் தெரிவித்தார் என ஜனாதிபதி ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

ஜனாதிபதியின் செயலாளர் கலாநிதி நந்திக சனத் குமாநாயக்க மற்றும் ஜனாதிபதியின் சிரேஷ்ட மேலதிக செயலாளர் ரோஷன் கமகே ஆகியோரும் இந் நிகழ்வில் கலந்து கொண்டனர்.

# கனேடிய உயர்ஸ்தானிகர் ஜனாதிபதியுடன் சந்திப்பு



ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க விற்கும் இலங்கைக்கான கனேடிய உயர்ஸ்தானிகர் எரிக் வொல்ஷிற்கும் இடையிலான சந்திப்பு நேற்று பிற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் இடம்பெற்றது.

தனது பதவிக்காலம் நிறைவடைந்து இலங்கையை விட்டு வெளியேறும் எரிக் வொல்ஷின் எதிர்கால செயற்பாடுகளுக்கு ஜனாதிபதி வாழ்த்து தெரிவித்தார்.

கனடாவில் இலங்கை மக்கள் அதிகளவில் வசிப்பதை நினைவு கூர்ந்த ஜனாதிபதி, பொருளாதார நெருக்கடியை வெற்றி கொள்வதற்கும், இந்நாட்டில் மனித உரிமைகளை மேம்படுத்துவதற்கும், நல்லிணக்கச் செயல்முறைக்கும் கனடா வழங்கிய ஆதரவைப் பாராட்டியதுடன், எதிர்காலத்திலும் அத்தகைய ஆதரவு வழங்கப்படும் என்று எதிர்பார்ப்பதாகவும் தெரிவித்தார் என ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

இந்நிகழ்வில் ஜனாதிபதியின் செயலாளர் கலாநிதி நந்திக சனத் குமாநாயக்க மற்றும் ஜனாதிபதியின் சிரேஷ்ட மேலதிக செயலாளர் ரோஷன் கமகே ஆகியோரும் கலந்து கொண்டனர்.




# கிளிநொச்சி நகர அபிவிருத்தி நடைமுறைகள் தொடர்பில் வர்த்தக சங்கம் – கரைச்சி பிரதேச சபை இடையே இணக்கம்

கிளிநொச்சி நகரின் மையப் பகுதியில் அமைக்கப்பட்டுள்ள அனுமதியற்ற வர்த்தக நிலையங்கள் மற்றும் சட்டவிரோதக் கட்டுமானங்களை அகற்றுவது தொடர்பில் கிளிநொச்சி நகர வர்த்தகர்களுக்கும் கரைச்சி பிரதேச சபையினருக்கும் இடையே ஏற்பட்ட முரண்நிலைகளுக்கு இரு தரப்பு கலந்துரையாடலில் இணக்கம் காணப்பட்டுள்ளது.


சபைத் தீர்மானத்தை நடைமுறைப் படுத்திய விதத்தில் வர்த்தகர்களிடையே ஏற்பட்ட அதிருப்தி, அதனால் நிலவிய குழப்ப நிலை என்பவற்றுக்குத் தீர்வு காணும் நோக்கில், நாடாளுமன்ற உறுப்பினரும் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்றக் குழுத் தலைவருமான சிவஞானம் சிறீதரனின் தலைமையில் கரைச்சி பிரதேச சபையின் தவிசாளர், செயலாளர் மற்றும் உறுப்பினர்களின் பிரசன்னத்துடன் கிளிநொச்சி நகர வர்த்தகர் சங்கத்தினருடனான கலந்துரையாடல் பிரதேச சபையின் மாநாட்டு மண்டபத்தில் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை நடைபெற்றது.

இதன்போது, சபையின் சட்ட வரம்புகளுக்கு உட்பட்ட தீர்மானங்களை உடனடியாக நடைமுறைப்படுத்துவதால் வர்த்தகர்கள் எதிர்கொள்ளக்கூடிய பாதிப்புகளைத்தவிர்க்கும்வகையில், எதிர்வரும் ஜனவரிமாதம்31ஆம்திகதிவரைவர்த்தகர்களுக்குக் கால அவகாசம் வழங்குமாறு வர்த்தகசங்கத்தினரால்முன்வைக்கப்பட்ட கோரிக்கை ஏற்றுக் கொள்ளப்பட்டதன் அடிப்படையில் குறித்த விடயத்தில் இரு தரப்பினரிடையேயும் இணக்கம் எட்டப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# திருமலைக் கடற்கரையில் சட்ட விரோதமாக அமைக்கப்பட்ட கடையை உடைக்க நோட்டீஸ்





(எஸ்.கீதபொன்கலன்)

திருகோணமலைடச்சுக்குடாகடற்கரையில், பௌத்த விகாரைக்கு அண்மித்து சர்ச்சைக்குரிய முறையில் அமைக்கப்பட்டுள்ள சட்ட விரோத கடையை உடைத்து அகற்றுவதற்கான அறிவித்தல் நேற்றுக் கரையோர பாதுகாப்புத் திணைக்களகத்தின் திருகோணமலை மாவட்ட அதிகாரியால் உரிய கடை வாசலில் ஒட்டப்பட்டது.

இவ்வறித்தலின் படி நேற்று முதல் 14 நாள்களுக்குள் இக்கடையை அமைத்தவர்கள் தாமாகவே இந்த நிர்மாணங்களை உடைத்து அகற்ற வேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த காலக்கெடு முடிந்த பின்னரும் நிர்மாணங்கள் அகற்றப்படாத பட்சத்தில் கரையோரப் பாதுகாப்பு திணைக்களம் அவற்றை உடைத்து அகற்றும் எனவும் அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஏற்கனவே இந்த இடத்தில் தற்காலிக கடை ஒன்றை அமைப்பதற்கு மட்டுமே தமது திணைக்களம் உரிமையாளருக்கு அனுமதி வழங்கி இருந்தது. ஆனால் அந்த அனுமதியை பயன்படுத்தி சட்டத்திற்கு முரணாக இங்கு நிரந்தர கட்டுமாணம் அமைக்கப்பட்டுள்ளது. இதனை அகற்றுமாறு இதற்கு முன்னர் உரிய முறையில் உரிமையாளருக்கு அறிவித்தல் கொடுக்கப்பட்டிருந்தது. இந்நிலையிலேயே நேற்று உடைத்து அகற்றும் அறிவித்தல் வழங்கப்பட்டதாக கரையோரப் பாதுகாப்புத் திணைக்களத்தின் திருகோணமலை மாவட்ட அதிகாரி கூறினார்.

மேலும் இக்கடையின் உரிமையாளர் விரும்பினால் இவ் உத்தரவு தொடர்பில் தமது மேன்முறையீட்டை சுற்றாடல்துறை அமைச்சின் செயலாளருக்கு மேற்கொள்ள முடியும் எனவும் அறிவித்தலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.





# இருபாலையில் மக்கள் குறைகேள் சந்திப்பு

யாழ்ப்பாண மாவட்டம், வலிகாமம் கிழக்கு – கோப்பாய் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட இருபாலை பிரதேச சமூகமட்ட அமைப்புகளின் பிரதிநிதிகளுக்கும், நாடாளுமன்ற உறுப்பினரும் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்றக் குழுத் தலைவருமான சிவஞானம் சிறீதரனுக்கும் இடையிலான மக்கள் குறைகேள் சந்திப்பு, இருபாலை நரசிம்ம வைரவர் கோயிலடியில் உள்ள அன்னை இந்திரா சனசமூக நிலையத்தில் நடைபெற்றது.

இருபாலை மாதர் கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவி உசாயினி சிறீதரன் தலைமையில் நடைபெற்ற இந்தக் கலந்தரையாடலில், அந்தப் பிரதேச கிராம அலுவலர், சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர், பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர், கமக்கார அமைப்பின் பிரதிநிதிகள் மற்றும் சிவில் சமூக அமைப்புகளின் பிரதிநிதிகள், பொது மக்கள் உள்ளிட்டோர் கலந்துகொண்டு தமது பிரதேசத்தின் தேவைப்பாடுகள், உட்கட்டுமான அபிவிருத்தி எதிர்பார்ப்புகள் குறித்த கோரிக்கைகள் தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர் சிறீதரனின் கவனத்துக்குக் கொண்டு வந்திருந்தனர்.

குறிப்பாக, உள்ளக வீதிகளுக்கான பெயர்ப்பலகையிடல், இருபாலை தெற்கு, மேற்கு கிராமங்களில் நிலவும் குடிதண்ணீர் தட்டுப்பாடு, பொதுநோக்கு மண்டபம் இன்மை, செக்கடி இந்து மயான வீதி உள்ளிட்ட உள்ளக வீதிகளின் புனரமைப்பு, மழைநீர் வடிகாலமைப்பு மற்றும் கந்தவேள் அ.த.க. பாடசாலைக்கு நீண்டகாலமாக அதிபர் நியமிக்கப்படாமை உள்ளிட்ட விடயங்கள் தொடர்பில் கலந்தரையாடப்பட்டன.

இதன்போது நாடாளுமன்ற உறுப்பினர் சிறீதரனுடன் வலிகாமம் கிழக்கு பிரதேச சபைத் தவிசாளர் தியாகராஜா நிரோஷ், சபையின் உறுப்பினர்களான கமலறேகன், கஜேந்திரகுமார், கஜேந்தினி மற்றும் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் கோப்பாய் தொகுதிக் கிளை உறுப்பினரும் வடக்கு மாகாண சபையின் முன்னாள் உறுப்பினருமான அரியகுட்டி பரஞ்சோதி ஆகியோர் கலந்துகொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.













# மடு அன்னையின் ஆவணித் திருவிழாவை முன்னிட்டு பக்தர்களின் யாத்திரை மல்லாவியை வந்தடைந்தது

(ஜெகதீஸ்வரன் டிஷாந்த்)

மடுமாத ஆலயத்தின் ஆவணி திருவிழா நாளை மறுதினம் 15 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள நிலையில் வடக்கு மாகாணத்தின் பல பாகங்களில் இருந்தும் இன மத பேதமின்றி மடுத் திருத்தலம் நோக்கிய பக்தர்களின் நடைபயணம் புறப்பட்டு நேற்றைய தினம் பாண்டியன்குளம் நட்டாங்கண்டல் பகுதியை வந்தடைந்துள்ளது.

மடு அன்னையின் ஆவணி திருவிழாவை முன்னிட்டு வடக்கில் உள்ள மாவட்டங்களில் இருந்து மக்கள் ஒவ்வொரு வருடமும் நடைபயணம் மேற்கொண்டு மடுத் திருத்தலம் நோக்கி பாதாயாத்திரையாகச் செல்வது வழமை.

அதே போல் இம்முறையும் பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் வடக்கின் பல பாகங்களிலிருந்தும் நடைபயணம் மேற்கொண்டு வருகின்றார்கள்.

முல்லைத்தீவுமாவட்டத்தின்முல்லைத் தீவு, இரணைப்பாலை, வற்றாப்பளைப் பகுதிகளில் இருந்து கட்டம் கட்டமாக மக்கள் தங்கள் நேர்த்திக்கடன்களை நிறைவுசெய்ய நடைபயணம் மேற்கொண்டு வருகின்றார்கள்.

இதேவேளை யாழ்ப்பாணம் கரவெட்டி, துன்னாலை சதாசகாய மாதா ஆலயத்திலிருந்து கடந்த 08 ஆம் திகதி நடை பயணம் மேற்கொண்டிருந்த பக்தர்கள் நேற்றுக் காலை நட்டாங்கண்டல் பகுதியை வந்தடைந்துள்ளனர்.

இவ்வருடம் அதிக எண்ணிக்கையான பக்தர்கள் நேர்த்தி கடன்களை நிறைவு செய்ய கட்டம் கட்டமாக நடைபயணம் மேற்கொண்டுள்ளனர்.

இதேவேளை இந்து சகோதரர்களும் இனமத பேதமின்றி நடை பயணத்தில் கலந்து கொண்டு மடு நோக்கிப் பயணிக்கின்றனர்.

இதேவேளை நடை பயணத்தில் கலந்துகொண்டுள்ள யாத்திரிகர்களின் சிரமம் கருதி குடிதண்ணீர் மற்றும் சுகாதார வசதிகளை மாந்தை கிழக்கு பிரதேச சபை வழங்கி வருவதாக மாந்தை கிழக்கு பிரதேச சபையின் தவிசாளர் ராசையா நளினி தெரிவித்தார்.

யாழ்ப்பாணம்,கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களை சேர்ந்த பக்தர்கள் முல்லைத்தீவு - மன்னார் எல்லை கிராம பாதையான பாண்டியன்குளம், நட்டாங்கண்டல், பாலம்பிட்டி சென்று அங்கிருந்து மடுவிற்கு செல்கின்றனர்.


















# அம்பாறை வீரமுனைப் படுகொலைகளின் 35 ஆவது ஆண்டு நினைவேந்தல் நேற்று

**(வி.ரி.சகாதேவராஜா)**

அம்பாறை மாவட்டம் வீரமுனை கிராமத்தில் 1990.08.12 அன்று 232 இற்கும் அதிகமான தமிழ் மக்கள் கொன்று குவிக்கப்பட்ட கொடூரத்தின் 35 ஆவது ஆண்டடை நினைவு கூர்ந்து வீரமுனையில் நேற்று அங்கு அமைந்துள்ள நினைவுத்தூபிக்கு முன்னால் அஞ்சலி நிகழ்வுகள் இடம்பெற்றன.

இதன்போது பிள்ளையார் ஆலயத்திற்கு முன்னால் அமைக்கப்பட்டுள்ள நினைவுத்தூபிக்கு மாலை அணிவிக்கப்பட்டு, படுகொலை செய்யப்பட்டவர்களை நினைவு கூர்ந்து, தீபச்சுடர் ஏற்றி ஒரு நிமிட அஞ்சலியுடன் அஞ்சலி வணக்கமும் செலுத்தப்பட்டது.

கடந்த யுத்த சூழ்நிலையில் சம்மாந்துறை பிரதேசத்தில் நிகழ்ந்த வன்செயல்கள் காரணமாக வீரமுனையையும் அதன் சுற்றுவட்டக் கிராமங்களான வீரச்சோலை, மல்லிகைத்தீவு, மல்வத்தை, வளத்தாப்பிட்டி, சொறிக்கல்முனை அம்பாறை பகுதிகளையும் சேர்ந்த பல நூற்றுக்கணக்கான மக்கள் தங்கள் வீரமுனை சிந்தா யாத்திரைப் பிள்ளையார் கோயில் வளவினுள்ளும் வீரமுனை இராமகிருஷ்ண மிசன் பாடசாலை வளவினுள்ளும் தஞ்சம் புகுந்திருந்தனர்.

இந்த நிலையில் 1990ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 12ஆம் திகதி மர்மக் குழுவினரால் 400க்கும் அதிகமான பொதுமக்கள் சுட்டும் வெட்டியும் கொலை செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

நேற்றைய நினைவு கூரக் நிகழ்வின் போது மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான ஞா.ஸ்ரீநேசன், வைத்தியர் இ.ஸ்ரீநாத், அம்பாறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் க.கோடிஸ்வரன், மட்டக்களப்பு மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் கோ.கருணாகரம். காரைதீவு பிரதேச சபை தவிசாளர் சு.பாஸ்கரன், முன்னாள் தவிசாளர் கே. ஜெயசிறில் மற்றும் சமூகசெயற்பாட்டாளர்கள், வீரமுனை மண்ணில் உயிர் நீத்த உறவுகளின் உறவினர்கள், பொது மக்கள் பலரும் கலந்துகொண்டு தீபச்சுடர் ஏற்றி, மலரஞ்சலி செலுத்தி நினைவேந்தினர்.



















# வவுனியா உக்குளாங்குளத்தில் ஞாயிறு வீட்டின் மீது தாக்குதல் ஒருவர் காயம்!


(கி.வசந்தன்)

வவுனியா, உக்குளாங்குளம் பகுதியில் உள்ள ஒரு வீட்டின் மீது கடந்த ஞாயிறு இனந்தெரியாத நபர்கள் தாக்குதல் மேற்கொண்டுள்ளனர்.

இச்சம்பவம் தொடர்பில் மேலும் தெரிய வருதாவது:–

வவுனியா, உக்குளாங்குளம், சிவன் கோவில் பகுதியில் உள்ள வீடு ஒன்றின் நுழைவாயில் மற்றும் வீட்டு வேலி மீது இனந்தெரியாத குழு ஒன்று தாக்குதல் மேற்கொண்டுள்ளனது. தாக்குதல் சத்தத்தையடுத்து வெளியில் வந்த வீட்டு உரிமையாளர் மீதும் அக் குழு தாக்குதல் நடத்தியதில் அவர் காயமடைந்து வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் தொடர்பில் வீட்டு உரிமையாளரால் செய்யப்பட்ட முறைப்பாட்டுக்கு அமைய வவுனியா பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.



1/B

முறைப்பாடு ஏற்றுக்கொள்ளல்
Acknowledgement of Complaint

பொலிஸ் நிலையம்
Police Station: வவுனியா

திகதி
Date: 2025/08/07

Name of Complainant:

Nature of Complaint:

I. B. Reference:

Signature of Recording Officer:

Name Rank & Reg. No. of Recording Officer: PC 8173









# துணுக்காய் பிரதேச செயலகத்தின் முன்பாக குடும்பஸ்தர் ஆரம்பித்த உண்ணாவிரதப் போராட்டம் முடிவுக்கு வந்தது

(பா.சதீசன்)

துணுக்காய் பிரதேச செயலகம் முன்பாக நேற்றையதினம் உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டவரை சந்தித்த பிரதேச ஒருங்கிணைப்புக் குழுத் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான செல்லத்தம்பி திலகநாதன் சந்தித்து கலந்துரையாடி போராட்டத்தை நிறைவுறுத்தி வைத்தார்.

நேற்று முன்தினம் காலையில் 6 கோரிக்கைகளை முன் வைத்து, நீதி கோரி துணுக்காய் பிரதேச செயலகம் முன்பாக குடும்பஸ்தர் ஒருவர் உண்ணா விரதப் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தார்.

# துணுக்காய் பிரதேச செயலகம் தனியார் முதலாளிகளிடம் இருந்து இதுவரை லஞ்சமாக பெற்ற அனைத்தையும் மீளக் கையளிக்க வேண்டும்.

# பிரதேச செயலக ஆளுகைக்குள்ள மக்கள் அனைவரும் சமமாக மதிக்கப் படவேண்டும்.

# 2017ஆம் ஆண்டு வரட்சி நிவாரணம் வழங்கியமை தொடர்பிலும் அதன் தெரிவுப் பட்டியல் தொடர்பிலும் அனைத்து கிராம சேவகர் பிரிவிலும் நீதியானதும் நியாயமானதுமான விசாரணை மேற்கொள்ளப்பட வேண்டும்.

# காணிப்பிணக்குகளை பாரபட்சமற்ற முறையில் தீர்க்கவேண்டும் மற்றும் காணிகள் வழங்கப்படவேண்டும்.

# தமது மனைவியான கிராம அலுவலர் திருமதி கிருச்க்ணரூபன் கலைச்செல்வியின் தண்டனைப் பணியிட மாற்றம் தொடர்பில் வெளிப்படையான விசாரணையும் தீர்வும் வேண்டும்.

– என்பன உள்ளிட்ட கோரிக்கைகளை முன் வைத்தே அவர் போராட்டத்தில் குதித்திருந்தார்.

இதனிடையே நேற்று முன்தினம் காலையில் தொடங்கிய போராட்டம், நள்ளிரவு தாண்டி நேற்றுப் பிற்பகல் வரை இடம்பெற்றது.

இந்த நிலையில் இது தொடர்பில் கேட்டறிந்து கொண்ட பிரதேச ஒருங்கிணைப்புக் குழுத் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான செல்லத்தம்பி திலகநாதன் சம்பவ இடத்திற்கு நேரடியாக வருகை தந்து, துணுக்காய் பிரதேச செயலாளருடன் கலந்தாலோசித்துவிட்டு, மாவட்ட செயலாளருடனும் உரையாடிய பின்னர், உண்ணாவிரதம் இருக்கும் நபரை பிரதேச செயலாளருடன் சென்று சந்தித்து கலந்துரையாடினார்.

அந்த நபரின் கோரிக்கைகளுக்கான விசாரணைகள் மாவட்ட செயலாளரால் ஆரம்பிக்கப்பட்டுள்ளன எனவும், அது தொடர்பிலான தீர்வுகள் வழங்கப்படும் என்று உறுதிமொழி வழங்கியமைக்கு அமைய உண்ணாவிரதம் இருந்த நபருக்கு பிரதேச ஒருங்கிணைப்பு குழு தலைவரால் பழச்சாறு வழங்கப்பட்டு, உண்ணாவிரதம் நிறைவுறுத்தப்பட்டது.











# காசாவில் பாலஸ்தீனர்கள் கொல்லப்படுவதை இந்தியா வேடிக்கை பார்ப்பது வெட்கக்கேடு

## பிரியங்கா காந்தி கண்டனம்

இஸ்ரேலிய அரசால், பாலஸ்தீனத்தில் அப்பாவிகள் கொல்லப்படுவதை இந்தியா வேடிக்கை பார்ப்பது வெட்கக்கேடானது என்று காங்கிரஸ் பொதுச் செயலாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான பிரியங்கா காந்தி வத்ரா கண்டித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள எக்ஸ் பதிவில், "இஸ்ரேலிய அரசு இனப்படுகொலையை செய்து வருகிறது. 60,000 இற்கும் மேற்பட்ட மக்களை அது கொன்றுள்ளது, இவர்களில் 18,430 பேர் குழந்தைகள்.

அதோடு, நூற்றுக்கணக்கானவர்களை இஸ்ரேல் பட்டினியால் கொன்றுள்ளது, இதில் பலர் குழந்தைகள். மேலும், பல லட்சம் பேர் பட்டினியால் வாடிக்கொண்டிருக்கிறார்கள். அவர்களில் பலர் மரணத்தை நெருங்கும் அபாயம் உள்ளது.

இந்தக் குற்றங்களை மௌனமாக செயல்படுத்துவது மட்டுமல்லாது, அவற்றை வேடிக்கை பார்ப்பதும்கூட ஒரு குற்றமாகும்.

பாலஸ்தீன மக்கள் மீது இஸ்ரேல் அழிவை கட்டவிழ்த்து விடும்போது இந்திய அரசு அமைதியாக இருப்பது வெட்கக்கேடானது." என கண்டித்துள்ளார்.

அவர் வெளியிட்டுள்ள மற்றொரு எக்ஸ் பதிவில், "அல் ஜசீரா தொலைக்காட்சியின் ஐந்து பத்திரிகையாளர்கள் கொடூரமாக கொல்லப்பட்டிருப்பது, பாலஸ்தீன மண்ணில் நிகழ்ந்துள்ள மற்றொரு கொடூரமான குற்றமாகும்.

உண்மைக்காக நிற்கத் துணிந்தவர்களின் அளவிட முடியாத தைரியத்தை, இஸ்ரேலிய அரசின் வன்முறை மற்றும் வெறுப்பால் ஒன்றும் செய்ய முடியாது.

ஊடகங்களில் பெரும்பாலானவை அதிகாரத்துக்கும் வர்த்தகத்துக்கும் அடிமைப்படுத்தப்பட்ட உலகில், இத்தகைய துணிச்சலான ஆன்மாக்கள் உண்மையான பத்திரிகை என்றால் என்ன என்பதை நமக்கு நினைவூட்டி உள்ளன. அவர்கள் சாந்தியடையட்டும்." என குறிப்பிட்டுள்ளார்.

# காசாவில் இனப்படுகொலை நடக்கவில்லை; பிரியங்கா காந்திக்கு இஸ்ரேல் தூதுவர் பதில்



காசாவில் இனப்படுகொலை நடக்கவில்லை என்றும் அங்கு நடக்கும் பெரும்பாலான கொலைகளுக்கு ஹமாஸ் அமைப்பினர் காரணம் எனவும் இந்தியாவுக்கான இஸ்ரேல் தூதுவர் தெரிவித்துள்ளார்.

இஸ்ரேலிய அரசால் பாலஸ்தீனத்தில் அப்பாவிகள் கொல்லப்படுவதை இந்தியா வேடிக்கை பார்ப்பது வெட்கக்கேடானது என்று காங்கிரஸ் பொதுச் செயலாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான பிரியங்கா காந்தி குற்றம்சாட்டி இருந்தார்.

பிரியங்கா காந்தியின் எக்ஸ் பதிவை டேக் செய்து இந்தியாவுக்கான இஸ்ரேல் தூதர் ரூவென் அசார் பதில் அளித்துள்ளார். அவரது அந்த பதிவில்,

"வெட்கக்கேடான விஷயம் என்னவென்றால், உங்கள் வஞ்சகம்தான். இஸ்ரேல் 25,000 ஹமாஸ் பயங்கரவாதிகளையே கொன்றது. பொதுமக்கள் மத்தியில் ஏற்பட்ட உயிரிழப்புகளுக்குப் பின்னால் ஒளிந்து கொண்டிருப்பது ஹமாஸின் கொடூரமான தந்திரங்கள். வெளியேற அல்லது உதவி பெற முயற்சிக்கும் மக்களைச் சுடுவது, அவர்களுக்கு எதிராக ராக்கெட் தாக்குதல்களை நடத்துவது ஆகியவை காரணமாகவே பொதுமக்கள் உயிரிழக்க நேரிடுகிறது.

காசாவுக்கு 20 லட்சம் தொன் உணவை இஸ்ரேல் வழங்கியது. அதேநேரத்தில், அவற்றைக் கைப்பற்ற ஹமாஸ் முயல்கிறது, இதன்மூலம் பட்டினியை உருவாக்குகிறது. கடந்த 50 ஆண்டுகளில் காசாவின் மக்கள் தொகை 450 வீதம் அதிகரித்துள்ளது. அங்கு இனப்படுகொலை இல்லை." என்று அவர் தெரிவித்துள்ளார்.

முன்னதாக, அல்ஜீரா தொலைக்காட்சியைச் சேர்ந்த பத்திரிகையாளர்கள் 5 பேர் கொல்லப்பட்டதற்கும் பிரியங்கா காந்தி கண்டனம் தெரிவித்திருந்தார். இது தொடர்பாக அவர் வெளியிட்ட மற்றொரு எக்ஸ் பதிவில்,

"அல்ஜீரா தொலைக்காட்சியின் ஐந்து பத்திரிகையாளர்கள் கொடூரமாக கொல்லப்பட்டிருப்பது, பாலஸ்தீன மண்ணில் நிகழ்ந்துள்ள மற்றொரு கொடூரமான குற்றமாகும்.

உண்மைக்காக நிற்கத் துணிந்தவர்களின் அளவிட முடியாத தைரியத்தை, இஸ்ரேலிய அரசின் வன்முறை மற்றும் வெறுப்பால் ஒன்றும் செய்ய முடியாது. ஊடகங்களில் பெரும்பாலானவை அதிகாரத்துக்கும் வர்த்தகத்துக்கும் அடிமைப்படுத்தப்பட்ட உலகில், இத்தகைய துணிச்சலான ஆன்மாக்கள் உண்மையான பத்திரிகை என்றால் என்ன என்பதை நமக்கு நினைவூட்டி உள்ளன. அவர்களது ஆன்மா சாந்தியடையட்டும்" என தெரிவித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.







# இந்திய நாடாளுமன்ற வளாகத்தில் எதிர்க்கட்சி எம்.பி.க்கள் ஆர்ப்பாட்டம்

பிஹார் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தத்துக்கு எதிர்ப்பு தெரிவித்து நாடாளுமன்ற வளாகத்தில் இண்டியா கூட்டணி எம்.பிக்கள் காங்கிரஸ் மூத்த தலைவர் சோனியா காந்தி தலைமையில் நேற்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இதில் பங்கேற்ற பிரியங்கா காந்தி உள்ளிட்ட சில எம்.பிக்கள் மின்டா தேவி என்ற பெயர் பொறிக்கப்பட்ட ரி சேர்ட்களை அணிந்துகொண்டு கோஷங்களை எழுப்பினர்.

இந்திய தேர்தல் ஆணையம் பிஹாரில் நடத்தி வரும் சிறப்பு தீவிர திருத்தத்தை நிறுத்த வேண்டும் என்று அவர்கள் வலியுறுத்தினர்.






# பாகிஸ்தானின் பலுசிஸ்தான் விடுதலை படையை பயங்கரவாத அமைப்பாக அறிவித்தது அமெரிக்கா

பாகிஸ்தானில் இயங்கும் பிரிவினைவாத அமைப்பான பலுசிஸ்தான் விடுதலைப்படையை பயங்கரவாத அமைப்பாக அமெரிக்க அரசு அறிவித்துள்ளதாக சர்வதேச ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

பலுசிஸ்தான் மாகாணத்தை தனி நாடாக அறிவிக்க வேண்டும் என்று கோரி பலுசிஸ்தான் விடுதலை படை பாகிஸ்தானுக்கு எதிராக தொடர் தாக்குதல்களில் ஈடுபட்டு வருகிறது.

இந்நிலையில் தொடர் வன்முறை தாக்குதல்களை அடுத்து, பலுசிஸ்தான் விடுதலை படை மற்றும் அதன் மற்றொரு பெயரான மஜீத் படைப்பிரிவை பயங்கரவாத அமைப்பாக அமெரிக்கா உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்க வெளியுறவு அமைச்சர் மார்கோ ரூபியோ இந்த அறிவிப்பை செய்திக்குறிப்பு மூலம் வெளியிட்டுள்ளார் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் அவர் குறிப்பிடுகையில், பலுசிஸ்தான் விடுதலை படையின் வன்முறை நடவடிக்கைகள் மக்களின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக உள்ளன.

மேலும், பிராந்தியத்தின் ஸ்திரத்தன்மையை சீர்குலைத்தும் வருகின்றன. வெளியுறவுத் துறையின் இந்த நடவடிக்கை பயங்கரவாதத்தை எதிர்க்கும் ஜனாதிபதி ட்ரம்பின் நிர்வாகத்தின் உறுதிப்பாட்டை நிரூபிக்கிறது.

பயங்கரவாத நடவடிக்கைகளுக்கு எதிரான ஆதரவை குறைப்பதற்கு இதுவே ஒரு சிறந்த வழி என்று குறிப்பிட்டுள்ளார்.

# சட்டவிரோதமாக குடியேறுபவர்கள் உடனடியாக நாடு கடத்தப்படுவார்கள்

## பிரித்தானிய பிரதமர் கெய்ர் ஸ்டாமர் அறிவிப்பு

சட்டவிரோதமாக பிரித்தானியாவில் குடியேறுபவர்கள் உடனே கைது செய்யப்பட்டு நாடு கடத்தப்படுவர் என பிரித்தானிய பிரதமர் கெய்ர் ஸ்டாமர் தெரிவித்துள்ளார்.

பிரித்தானியாவில் சட்டவிரோதமாக குடியேறுபவர்கள் முதலில் வெளியேற்றப்பட்டு விடுவார்கள் எனவும் இவர்கள் இது தொடர்பில் காணொலி வாயிலாகவே மேன்முறையீடு செய்யலாம் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

புதிய விதிப்படி 23 நாடுகளைச் சேர்ந்தவர்கள் நாடு கடத்தப்படுவர் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, 2029ஆம் ஆண்டிற்குள் 1.5 மில்லியன் புதிய வீடுகளை நிர்மாணிப்பதற்கு பிரித்தானிய அரசு நடவடிக்கை எடுத்துள்ளது.

அத்துடன். இந்த திட்டத்திற்காக 625 மில்லியன் பவுண்டுகள் நிதியினை ஒதுக்கியுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின் மூலம் பலருக்கு வேலை வாய்ப்பினை ஏற்படுத்தி கொடுக்கலாம் என்றும் அந்நாட்டு அரசு தெரிவித்துள்ளது.







# ரோபோவினால் இயக்கப்படுகின்ற முதலாவது வர்த்தக நிலையம் திறப்பு

மனித உருவ ரோபோவினால் இயக்கப்படும் உலகின் முதலாவது வர்த்தக நிலையமொன்று சீனாவின் பீஜிங்கில் திறக்கப்பட்டுள்ளது.

9 சதுர மீட்டர் பரப்பளவு கொண்ட இந்த வர்த்தக நிலையம், “கால்போட்” என்ற மனித உருவ ரோபோவால் இயக்கப்படுகின்றது.

இந்த வர்த்தக நிலையத்தில் பானங்கள் உள்ளிட்டவை விற்பனை செய்யப்படுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

மேலும் இந்த ரோபோ பல மொழிகளைக் கையாளும் திறன் கொண்டது என வெளிநாட்டு ஊடகங்கள் குறிப்பிடுகின்றன.



# இந்தோனேசியாவில் சக்திவாய்ந்த நிலநடுக்கம்



இந்தோனேசியாவின் பப்புவா நியூகினியாவில் சக்திவாய்ந்த நிலநடுக்கம் பதிவாகியுள்ளதாக சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

6.5 ரிக்டர் அளவில் 10 கிலோ மீற்றர் ஆழத்தில் இந்த நிலநடுக்கம் பதிவாகியுள்ளதாக அமெரிக்க புவியியல் ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

வடக்கு இந்தோனேசியாவின் மக்கள் தொகை கொண்ட மாவட்டமான அபேபுராவிலிருந்து மேற்கு- வடமேற்கே 193 கிலோமீற்றர் தொலைவில் நேற்று இந்த நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளது.

# இன்றைய ராசி பலன்கள் -13.08.2025




இன்றைய நாள் நீங்கள் விரும்பத் தக்கதாக இருக்கும். உங்கள் இலக்கு களை எளிதில் அடைவீர்கள். இன்று பயனுள்ள திட்டங்களை தீட்டுவீர் கள். அது உங்களுக்கு சாதகமான பலன்களைத் தரும்.

உங்கள் பணியில் சாதகமான பலன்கள் கிடைக் கும். அதிகப்படியான பண வரவு ஊக்கத் தொகை யாக கிடைக்க வாய்ப்புள்ளது.

உங்கள் அன்பை உங்கள் துணையிடம் வெளிப் படுத்துவீர்கள். உறவில் நல்லிணக்கம் காணப்ப டும்.

இன்று பணம் சம்பாதிப்பதற்கான வலுவான அடித்தளத்தை அமைத்துக் கொள்வீர்கள். உங்கள் சேமிக்கும் ஆற்றல் அதிகரிக்கும்.

உங்களிடம் காணப்படும் உற்சாகமான மன ஆற்றல் காரணமாக இன்று உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




இன்றைய நாள் சுமூகமாகவும் வெற்றிக ரமாகவும் அமைய நீங்கள் திட்டமிட்டு செய லாற்ற வேண்டும். உங்கள் புத்திசாலித் தனத்தை பயன்படுத்த வேண்டும். ஸ்ரீ லட் சுமி நரசிம்மரை வணங்குவதன் மூலம் மகிழ்ச்சி கிடைக்கும்.

இன்று உங்களுக்கு வெளியிலிருந்து ஊக்கம் கிடைக் காது. உங்களை நீங்களே ஊக்கப்படுத்திக் கொள்ள வேண்டும். திட்டமிட்டு செயலாற்றுவதன் மூலம் பணி களை குறித்த நேரத்துக்கும் முடிப்பீர்கள். எதிர்பாராத வகையில் வரும் பணிகளையும் முடிப்பீர்கள்.

உறவு என்று வரும் போது நீங்கள் அதனை லேசாக கையாள வேண்டும். அன்பும் புரிந்து கொள்ளுதலும் உறவைச் சிறப்பாக்கும்.

பண வரவு குறைந்து காணப்படும். தேவையற்ற செல வுகளை எதிர்கொள்ள நேரும். தேவையானவை மற்றும் தேவையற்றவை போன்றவற்றை சாதுர்யமாக அறிந்து கொள்ள வேண்டும்.




இன்றைய நாள் பயனுள்ளதாக இருக் காது.என்றாலும்வருத்தப்படுவதைகுறைத் துக் கொண்டு, உங்களுக்கு விருப்பமான விஷயங்களுக்காக நேரத்தையும் திற மையையும் பயன்படுத்துங்கள். தியானப் பயிற்சி சிறந்தது. குழப்பங்களுக்கு இடம் கொடாமல் தெளிவாக எண்ண வேண்டும்.

உங்கள்நாளைதிட்டமிட்டுபணியாற்றுங்கள். பணிநிமித் தமான பயணம் காணப்படுகின்றது. உங்கள் அன்றாட பணிகளுடன் வேறு பணிகளையும் ஆற்றுவீர்கள்.

உங்கள் உணர்சிகளை முறையாக கட்டுப்படுத்த வேண்டும். இதனால் உறவுப் பிணைப்பு பாதிக்கப்படும்.

இன்று அதிர்ஷ்டமான நிதிநிலைமை காணப்படாது. பணம் சம்பாதிக்கும் திறமையை வளர்த்துக் கொள் ளுங்கள். கண்டிப்பாக நல்லது நடக்கும்.

முடிந்தவரை பதற்றமின்றி இருக்க முயலுங்கள். உடற்பயிற்சி அல்லது நடைப் பயிற்சி கால் வலியைக் குறைக்க உதவும்.




இன்று உங்கள் முயற்சிகளில் வெற்றி உங்களுக்கு சாதகமாக அமையும் நாள். மிகவும் அற்புதமான நாள். உங்கள் முடி வெடுக்கும் திறமையில் முன்னேற்றம் காணப்படும். உங்களிடம் உறுதி காணப் படும்.

உங்கள் பணியைப் பொறுத்தவரை சிறப்பான நிலையில் இருப்பீர்கள். உங்கள் மேலதிகாரிகளின் அங்கீகாரம் கிடைக்கப்பெறுவீர்கள். உங்களுக்கு புதிய வாய்ப்புகள் கிடைக்கும்.

உங்கள் கருத்துக்களை உங்கள் துணையுடன் இனிமை யான முறையில் பகிர்ந்து கொள்வீர்கள். இதனால் உறவில் நல்லிணக்கம் பராமரிக்கப்படும்.

நிதி வளர்ச்சி சிறப்பாக இருக்கும். உங்கள் சேமிப்பு நிலை உயரும்.

இன்று மொத்தத்தில் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். நல்ல தேக ஆரோக்கியத்தை பராமரிப்பீர்கள்.




எந்த விஷயத்தையும் லேசாக எடுத்துக் கொள்ள வேண்டும். இன்று பொறுமை அவசியம். இன்று உங்கள் பொறுப்புகள் அதிகமாக காணப்படும்.

பணியிடத்தில் பரபரப்பு காணப்படும். திட்டமிட்டு முன்னுரிமைப்படி பணியாற் றினால் எல்லாப் பணிகளையும் எளிதாக முடிக்கலாம்.

ஒருவருக்கொருவர் பரஸ்பரம் அன்பை பரிமாறிக் கொள் வது, அதுவும் கஷ்ட நேரங்களில் பரிமாறிக் கொள்வது உறவில் மிகவும் அவசியம். அவர் விரும்பும் வகையில் நடந்து கொள்வது சிறந்தது.

சிறு கடன்கள் மூலம் உங்கள்அடிப்படை தேவைகளை எளிதாக சமாளிக்கலாம். உங்களிடம் அதிக பணம் இல்லாவிட்டாலும் இருக்கும் பணத்தில் எப்படி வாழ வேண்டும் என்று அறிந்திருப்பீர்கள்.

உங்கள் உடல் நலத்தை சீர்படுத்தி இயல்பு நிலைக்கு கொண்டு வருவதற்கு பணம் செலவு செய்ய நேரலாம்




ஆன்மீக சொற்பொழிவுகள் கேட்டல் மற்றும் அடிக்கடி கோவிலுக்கு செல்வது மனதுக்கு ஆறுதல் தரும். முக்கிய முடிவு கள் எடுப்பதை தவிர்க்கவும். தியானம் மேற்கொள்வது சிறந்த பலனைத் தரும்.

செயல்களை திட்டமிட வேண்டும் மற்றும் அதன்படி முடிக்க வேண்டும். அப்பொழுதான் அவை உங்கள் கட்டுப்பாட்டில் இருக்கும், தேவையற்ற செயல்கள் செய்வதை தவிர்க்க முடியும்.

உங்கள் துணையுடன் நல்லுறவு பராமரிப்பதில் கவனம் செலுத்த வேண்டும். உறவு சம்பந்தமான விருப்பு வெறுப்புகளைப் பற்றி உங்கள் துணையிடம் பேசி தெரிந்து கொள்ள வேண்டும். அதனால் நல்ல புரிந்துணர்வும் உற வுப் பிணைப்பில் வலுவும் ஏற்படும்.

பயணத்தின் போதும் பணத்தை கையில் கொண்டு செல்லும் போதும் கவனமாக இருக்க வேண்டும். பயணத் தின் போது குறைந்த அளவில் பணத்தை கையில் எடுத் துச் செல்லுங்கள்.




நீங்கள் அதிகப்படியாக செயலாற்றி னால் வெற்றியைக் காண நேரலாம். உங்களின் நகை மற்றும் விலை மதிப் புள்ள பொருள்களை பாதுகாத்துக் கொள்ள வேண்டும். எச்சரிக்கையாக இருப்பதன் மூலம் பாதகமான விளைவு களை தவிர்கலாம்.

இன்று நன்மை தீமை இரண்டும் கலந்து காணப்படும். நீங்கள் சாதாரணமாக செய்வதை விட இன்று கூடுதலாக செயல் பட வேண்டும். என்றாலும் திட்டமிட்டு செயலாற் றினால் நீங்கள் நன்மை காணலாம். பணியின் தரத் தில் கவனம் தேவை. வேலை தொடர்பான பயணம் காணப்படும்.

உங்கள் துணையுடன் நட்பான அணுகுமுறை மேற் கொள்ளுங்கள். உங்கள் அன்பும் அரவணைப்பும் உங்கள் இருவருக்குமான உறவை வளர்க்க உதவும். உங்கள் துணையிடம் அன்பாக நடந்து கொண்டால் பதிலுக்கு அவரும் உங்களிடம் அன்பை வெளிப்படுத்துவார்.




இன்று இனிமையான சாதகமான நாள். இன்று நல்ல பலன்களைக் காண்பீர் கள். இன்றைய நாளை முறையாகத் திட்டமிடவும். முக்கிய முடிவுகளை எடுக் கலாம்.

நீங்கள் எந்தப்பணி செய்தாலும் அதில் இன்று வெற்றி காண்பீர்கள். உங்கள் பணி யைக் கண்டு உங்கள் மேலதிகாரிகள் பாராட்டுவார்கள்.

உங்கள் துணையுடன் பேசி அளவளாவுவீர்கள். இரு வரும் ஒருவரையொருவர் நன்கு புரிந்து கொண்டு நடந்து கொள்வீர்கள். ஒருவரின் கருத்துக்கு மற்றவர் மதிப்பு அளிப்பீர்கள்.

பணம் அபரிமிதமாக காணப்படும். அதனை உங்க ளின் நலனுக்கு பயன்படுத்துவீர்கள். பணத்தை சிறந்த முறையில் செலவு செய்வீர்கள்.

இன்று ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். உங்களி டம் காணப்படும் நேர்மறையான போக்கின் காரணமாக நீங்கள் ஆரோக்கியத்துடன் இருப்பீர்கள்.

# இன்றைய ராசி பலன்கள் -13.08.2025




இன்று உங்களுக்கு சிறப்பான நாள். உங்கள் அக்கம் பக்கத்தவரின் ஆதரவு கிடைக்கும். இன்று அனைத்தும் சிறப்பாக நடக்கும். இன்று நல்ல பலன்கள் கிடைக்கும்.

உங்கள் மேலதிகாரிகளின் ஆதரவு கிடைக்கும். அவர்கள் உங்களை பாராட்டுவார்கள். உங்கள் கடின உழைப்பு மற்றும் திறமை வெளிச்சத்துக்கு வரும்.

உங்கள் துணையுடன் விருந்து விசேஷங்களில் கலந்து கொள்ள வேண்டிய நேரம். இதில் நீங்கள் பங்கு கொண்டு மகிழ்வீர்கள். உங்கள் துணையிடம் மகிழ்ச்சியைப் பகிர்ந்து கொள்வீர்கள்.

வெளி நாட்டிலிருந்து பணம் கிடைக்க வாய்ப்புள்ளது. உங்களுக்கு தேவைப் படும் பொழுது அந்தப் பணம் கிடைக்கும்.

நேர்மறையான எண்ணம் மற்றும் திட்டமிடல் மூலம் இன்று பதற்றமின்றி இருக்கலாம். இதனால் ஆரோக்கியம் சிறப்பாக இருக்




இன்று சிறப்பான பலன்கள் கிடைக்காது. என்றாலும் அமைதியாக செயல்களை கையாண்டால் சரியாக செயலாற்றலாம். செயல்களை பொறுமையுடன் கையாளுங்கள்.

இன்று முன் கூட்டியே திட்டமிடலும் அதன்படி நடந்து கொள்வதும் கடினமாக இருக்கும். பணிகளை சரியான விதத்தில் கையாண்டால் சுமை குறைவாகத் தெரியும்.

உங்களுக்கும் உங்கள் துணைக்கும் இது மறக்க முடியாத நாளாக இருக்கும். இருவருக்கும் இடையே நல்ல பிணைப்பு ஏற்பட இருவரும் அனுசரித்து நடந்து கொள்வீர்கள். நல்ல வார்த்தைகளை பரிமாறிக் கொள்வதன் மூலம் இன்றைய நாளைச் சிறந்ததாக ஆக்கலாம்.

நீங்கள் சம்பாதிக்கும் பணத்தை விட அதிகம் பணம் இன்று உங்களுக்கு தேவையாக இருக்கும். என்றாலும் சூழ்நிலையைப் புரிந்து கொண்டால் எது தேவை எது தேவையில்லை என்று அறிந்து நீங்கள் உணர்வீர்கள்.

உங்கள் தாயின் ஆரோக்கியத்துக்காக இன்று பணம்



இன்று இறை வழிபாட்டில் ஈடுபடுங்கள். முக்கிய முடிவுகள் எடுப்பதை வேறு ஒரு நாளைக்கு தள்ளிப்போடுங்கள்.

பணியிடத்தில் திட்டமிட்டு வேலை செய்தால் பலன் கிடைக்கும். உங்களின் நேர்மறையான அணுகுமுறை காரணமாக அதிகப் பணிகளையும் எளிதாக கையாள்வீர்கள்.

உங்கள் துணையிடம் பேசும் போது புரிந்துகொண்டு பொறுமையாக பேச வேண்டும். உங்கள் வார்த்தைகள் தவறாகப் புரிந்து கொள்ள வாய்ப்புளதால் கவனமாகப் பேச வேண்டும். உங்கள் துணையிடம் அன்பாகப் பழகுவதன் மூலம் நேர்மறையான விளைவுகள் காணலாம்.

நீங்கள் அதிகமாக செலவு செய்வீர்கள். ஆனால் சிறப்பாக திட்டமிட்டால் பணம் குறைவாக செலவு செய்யலாம். தேவையற்ற செலவுகளைத் தவிர்க்கவும்.

உங்களை ஆரோக்கியமாக வைத்திருக்க உடற்பயிற்சி மேற்கொள்வது சிறந்தது. உங்கள் ஆரோக்கியத்தை நீங்கள் கவனமாக பார்த்துக் கொள்ள வேண்டியது




நீங்கள் மகிழ்ச்சியாக காணப்படுவீர்கள். இன்று முக்கிய முடிவுகளை எடுக்கலாம். இன்று அதிர்ஷ்டம் உங்கள் பக்கம் இருக்கும். வெற்றியின் உச்சத்துக்குச் செல்வீர்கள்.

உங்கள் திறமைக்கு அங்கீகாரம் கிடைக்கும். உங்கள் முயற்சி பாராட்டைப் பெறும். உங்களுக்கு கொடுக்கப்பட்ட பணி சிறியதாக இருந்தாலும் அதனை மகிழ்வுடன் சிறந்த முறையில் செய்வீர்கள்.

இன்று உங்களுக்கும் உங்கள் துணைக்கும் மிகவும் இனிமையான மகிழ்ச்சியான நாள். இருவரும் ஒருவரோடொருவர் நேரம் ஒதுக்கி கலந்து பேசலாம். அதே சமயத்தில் அமைதியைக் கையாள வேண்டும்.

இன்று கணிசமான பணம் சேமிப்பீர்கள். பங்கு வர்த்தகத்தின் மூலம் நல்ல பலன் கிடைக்கும்.

இன்று முழுவதும் நீங்கள் ஆரோக்கியமாக காணப்படுவீர்கள்.

# சபரிமலை ஐயப்பன் யாத்திரையை அங்கீகரிக்கப்பட்ட புனித தலயாத்திரையாகப் பிரகடனப்படுத்த அனுமதி



இந்தியாவின் கேரள மாநிலத்திலுள்ள சபரிமலை ஐயப்பன் சந்நிதானத்திற்கு வருடாந்தம் இலங்கை பக்தர்களால் மேற்கொள்ளப்படுகின்ற யாத்திரையை இலங்கை அரசால் அங்கீகரிக்கப்பட்ட புனித தலயாத்திரையாக பிரகடனப்படுத்த அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது. புத்தசாசன, சமய மற்றும் கலாசார விவகாரங்கள் அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் அளித்துள்ளது.

ஒவ்வொரு வருடமும் நவம்பர் மாதம் முதலாம் திகதி முதல் அடுத்த வருடம் ஜனவரி மாதம் 31 ஆம் திகதி வரையான காலப்பகுதியில் இந்தியாவின் கேரள மாநிலத்திலுள்ள சபரிமலைக்கு இலங்கை பக்தர்கள் புனித தலயாத்திரை மேற்கொள்கின்றனர்.